செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218 H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 சரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T. Phone 23794

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆவணி 25 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 9 (10 : 09 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 239

# லக்ஸபான நீர்மின் ஓரிரு வாரங்களில்!

## அமைச்சர் பெஸ்டஸ் வாக்குறுதி

யாழ்ப்பாணம். செப்டம்பர் 10

வடபகுதிக்கு நீர் மின்சாரம் வழங்குவதில் ஜனாதிபதி கூடுதல் அக்கறையாக இருக்கிறார், இன்னும் ஓரிரு வாரத்தில் இங்கு லக்ஸபான நீர் மின்சாரம் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

காங்கேசன் துறை லங்கா சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள ஜெனரேட்டர்களை மின்சார சபை பொறுப்பேற்கும் பொருட்டு நேற்று அங்கு விஜயம் செய்த மின்சக்தி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இதேவேளை கையேற்கப்பட்ட ஜெனரேட்டர்களில் ஒன்றைத் திருத்துவதற்கான உடனடி ஏற்பாடுகளுக்கும் அமைச்சர் நேற்று உத்தரவிட்டார்.

அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவுடன், மின்சக்தித் துறை துணை அமைச்சர் திரு. மேலின் கூரே, வீடமைப்பு நிர்மாணத்துறை துணை அமைச்சர் திரு. சந்திரா ரணசிங்கா ஆகியோரும் —

மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் திரு. வேர்ணன் பெர்னாண்டோ, உதவிப் பொது முகாமையாளர் திரு. விஜயமானே — ஆகியோரும் வந்திருந்தனர்.

விசேட ஹெலிக்கொப்டரில் காங்கேசன்துறை ஹாபர்வியு ஹோட்டலை வந்தடைந்த அமைச்சரையும் குழுவினரையும் மின்சார சபை அதிகாரிகள் வரவேற்று காங்கேசன் துறை லங்கா சிமெந்து தொழிற்சாலைக்கு அழைத்துச் சென்றனர்.

தொழிற்சாலையின் மின் நிலைய வாசலில் வைத்து வடபிராந்திய மின்சார சபை பிரதி பொது முகாமையாளர் திரு. கந்தசாமி அமைச்சருக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு கப்பல் மூலமும் எரிபொருள் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், செப் 10

போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. வடபகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்காக விசேட ரயில்மூலமும் கப்பல் மூலமாகவும் எரிபொருள்கள் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று காங்கேசன்துறை வந்த எரிபொருள், மின்சக்தி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதியில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. சிவஞானம் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவனத்தின்

## ஜெனரேட்டர்கள் இயங்கினாலும் முழு அளவில் மின் கிடைக்காது!

### மின்சாரசபை பொது முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 10

காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து நிறுவனத்திடமிருந்து பொறுப்பேற்கப்பட்டுள்ள இரண்டு ஜெனரேட்டர்களும் முழு அளவில் இயங்கத் தொடங்கினாலும் யாழ். மாவட்டத்தின் மின்சார தேவையை முற்றாகப் பூர்த்தி செய்ய முடியாது. தொடர்ந்தும் சுழற்சி முறையிலேயே மின்சாரம் விநியோகிக்கப்படும்.

இவ்வாறு இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் திரு. வி. கந்தசாமி உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்று காங்கேசன்துறையில் ஜெனரேற்றர்களை பொறுப்பேற்கும் வைபவம் நடைபெற்று முடிந்ததை அடுத்து வடபிராந்திய மின்சார சபை அலுவலகத்தில் விசேட மாநாடு ஒன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் இலங்கை மின்சார சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் திரு ஈ. என். விஜயமானவும் கலந்து கொண்டார்.

இந்த வைபவங்களை அடுத்து திரு. கந்தசாமி உதயனுக்கு பேட்டியளித்தார். அவர் கூறியதாவது:-

வடபகுதிக்கான நீர்மின் விநியோகம் கிடைத்தாலும் தற்போது பொறுப்பேற்கப்பட்டுள்ள இரண்டு ஜெனரேட்டர்களும் இலங்கை மின்சார சபையிடமே இருக்கும்.

இந்த ஜெனரேட்டர்களை திருத்தும் வேலைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த ஜெனரேட்டர்களின் பழுது பற்றியும், தொழில்நுட்பவியலாளர் உதவி கோரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளி நடந்த அசம்பாவிதத்தில்

## பருத்தித்துறை, புலோலியில் 2 பொதுமக்கள் உயிரிழப்பு

பருத்தித்துறை, செப். 10

வடமராட்சியில் பருத்தித்துறை, புலோலி, வியாபாரிமூலை ஆகிய முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) காலை ஒரே சமயத்தில் படையினர் வெளியே வந்தனர்.

அதை அடுத்து மோதல்கள் ஆரம்பமாகின. காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை அடிக்கடி ஷெல் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டுக்கொண்டே இருந்தன.

இச் சம்பவங்களின் போது பொதுமக்கள் இருவர் மரணமானார்கள்.

பருத்தித்துறை மருதடி, விஸ்வகுல ஒழுங்கையைச் சேர்ந்த எஸ். பஞ்சலிங்கம் (வயது 57) சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இவர் ஒரு மனநோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது.

புலோலி தெற்கு, பலப்பையைச் சேர்ந்த க. நடராசா

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

(10 - 9 - 1989)

ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை நக்ஷத்திரம்: பூராடம்

சுபநேரம்:

09-03 முதல் 10-33 வரை

ராகுகாலம்:

04-33 முதல் 06-03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முச்சந்தி முரளி



மந்திரியாற்றை சாத்தியக் கதை சாத்திரக் கதையாக இல்லாமல் பலிக்க விட வேணும் பாருங்கோ......!

## சிவாவும் பங்குபற்றுவார்

கொழும்பு, செப். 10

எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திரு. எம். சிவசிதம்பரம் மற்றும் திரு. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கொழும்பில் இத்தகவலைத் தெரிவித்தார். (ஓ-எ)

## குமுழமுனை, அளம்பிலில் இரவிரவாக ஷெல் வீச்சு!

முல்லைத்தீவு, செப் 10

முல்லைத்தீவில் குமுழமுனை, அளம்பில் ஆகிய கிராமங்களையும் கவிக்காடு, கோடாலிக்கல், தண்ணீர்முறிப்பு ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை அதிகாலை வரை இடைவிடாத தொடர்ச்சியான ஷெல் வீச்சுச் சத்தங்கள் கேட்டன.

அதேசமயம் வெள்ளிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உடல் நிலையில் மாற்றமில்லை

கல்கத்தா, செப் 10

79 வயதான அன்னை திரேஸாவின் உடல் நிலையில் மாற்றம் இல்லை.

காய்ச்சல் தணிவதாக இல்லை என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர். (ஓ-எ)

## யாழ். ரயில்கள் நேற்று இடைவழியில் தடைப்பட்டன

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் ரயில் அநுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டது.

நாகொல்லாகமவுக்கும் கணேவத்தைக்கும் இடையில் ரயில் பாதை சேதமுற்றிருந்ததே இதற்குக் காரணமாகும்.

இதே வேளை நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட பயணிகள் ரயில் ஒன்றும் சரக்கு ரயில் ஒன்றும் இதே போன்று இடைவழியில் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9-10)

## யாழ் பல்கலைக்கழகம் சர்வதேச அந்தஸ்து பெறும்

### பிரிட்டிஷ் அதிகாரி பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், செப் 10

யாழ். பல்கலைக்கழகத்தை சர்வதேச பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்த ஏதுவாக பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களுடன் இணைப்புச் சேவை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

நேற்று முன்தினம் பிரிட்டிஷ் கவுன்சில் உயர் அதிகாரியான திரு. ஜோன் பெயின் இவ்விடயம் குறித்து யாழ் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

பிரிட்டிஷ் சசக்ஸ் பல்கலைக்கழகம் தற்சமயம் இலங்கை பல்கலைக்கழகத்துடன் இணைப்புச் சேவையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் மூலம் இங்கிருந்து விரிவுரையாளர்கள் அங்கு சென்று மேற்படிப்பைப் பெறவும் அங்கிருந்து விரிவுரையாளர்கள் இங்கு வந்து விரிவுரை நடத்தவும் ஏற்பாடுகள் செய்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ★ ஐந்து கட்சிகளின் 4 கோரிக்கைகள்

# ஒரு மாத காலம் தொடர் ஆலோசனை

## ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, செப்டம்பர் 10

எதிர்வரும் புதன்கிழமை 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டின் பின்னர் தொடர்ந்து எதிர்க்கட்சிகளுடன் ஆலோசனைகளை நடத்தப்போவதாக ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸ உறுதி அளித்துள்ளார்.

இந்த ஆலோசனைகள் தொடர்ந்து ஒரு மாத காலம்வரையும் நடைபெறும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இரவிரவாக ஐந்து எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி திரு. பிரேமதாசாவுடன் பேச்சுக்கள் நடத்தின.

பேச்சுக்களின்போது நாட்டில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஐந்து எதிர்க்கட்சிகளும் சில கோரிக்கைகளையும் யோசனைகளையும் முன்வைத்தன.

இந்த யோசனைகள் குறித்தே ஏனைய கட்சிகளுடன் ஆலோசனை நடத்தப்போவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இத்தொடர் ஆலோசனைகள் முற்றுப்பெற்றதும் மீண்டும் அனைத்துக்கட்சி மாநாடு கூட்டப்படும். அப்போது மேல் நடவடிக்கை என்ன என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐந்து எதிர்க்கட்சிகளின் குழுவுக்கு எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

பேச்சின்போது எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

★ காபந்து அரசு அமைக்கப்பட வேண்டும்.

★ ஜனாதிபதி தலைமையிலான அரசுமுறை மாற்றப்பட்டு பிரதமர் அரசுமுறை கொண்டு வரப்பட வேண்டும்.

★ நீதியான, சுதந்திர நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

★ நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே உள்ள குழுக்களை தேசிய நீரோட்டத்தில் சேர்க்க வேண்டும். (ஓ-எ)

### வடக்கு - கிழக்கில்

## இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரிக்கை

வல்வெட்டித்துறை, செப் 10

★ வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

★ இதற்கு வசதியாக காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும்.

-நேற்று சனிக்கிழமை யாக்கரை முகாமில் நடைபெற்ற இந்திய அமைதிப்படையினர் -பிரசைகள் குழு பிரமுகர்கள் கலந்துரையாடலின்போது மேற்படி கருத்துக்கள் பிரமுகர்களினால் படையினர் முன் வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பின்போது யாக்கரை பொறுப்பாளர் பிரிகேடியர் சங்கர் பிரசாத், அமைதிப்படையின் வடபகுதி பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். என். பல்லா ஆகியோர் உட்பட பல அதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர், வைமன் வீதிகளில் நகை, பணம் கொள்ளை!

### நேற்றிரவு ஆயுதகோஷ்டி கைவரிசை

யாழ்ப்பாணம், செப் 10

நேற்றிரவு 7 மணி முதல் 9 மணிவரை யாழ்ப்பாணம் வைமன் வீதி, நாவலர் வீதி ஆகிய பகுதிகளில் பல வீடுகளில் கொள்ளைகள் இடம்பெற்றன.

கைத்துப்பாக்கிகள் சகிதம் வந்த ஆறு அல்லது ஏழு பேரடங்கிய கொள்ளைக் கோஷ்டியே வீடுகளில் இருந்தோரை மிரட்டி நகை, பணம் மற்றும் பெறுமதி மிக்க பொருள்களை கொள்ளையிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

வங்கி உயர் அதிகாரி ஒருவரின் வீடு, தனியார்துறை நிர்வாகி ஒருவரின் வீடு, பிரபல வர்த்தகர் ஒருவரின் வீடு ஆகியன கொள்ளையடிக்கப்பட்ட வீடுகளில் அடங்கும் என அறியவந்தது.

நாவலர் வீதியில் கொள்ளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பத்தாவது உச்சி மாநாடு கானாவில்!

பெல்கிறேட், செப் 10

அணிசேரா இயக்க நாடுகளின் பத்தாவது உச்சி மாநாடு 1991 ஆம் ஆண்டில் கானா நாட்டில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. Chaly-Automatic Hondadax, Suzuki 50 MB 5, Yamahamate, மோட்டார் சைக்கிள்கள் தொடர்பு: Our lady stores 601, Hospital Road, Jaffna: (2099)

Honda lead Recondition New உடன் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: பொன்னம்பலம் பழம் வீதி, ஆறுகால்மடம் வண்ணார்பண்ணை, மேற்கு: (1933)

Black Hyline முட்டையிடும் 8 கோழிகள், Black& Silver வயது 2 வயது Japanese Spitz ஆண் நாய், (குழந்தைகளுடன் அன்பாகப் பழகக் கூடியது.) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 887, ஆஸ்பத்திரி வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்: (2086)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books). அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மன்டேலா ரேடர் (புத்தகசாலை) இல:02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்: (1551)

Radiogram, Tape Recorder, TableFan விற்பனைக்குஉண்டு: இத்துடன் சிறிது திருத்த வேலைகளுடைய Fridge உம் உண்டு: புதிய மொடல் C-50 Honda Motor Cycle இற்கு மாற்றம் செய்யலாம். இ. வத்சலன் C/o. Ramsons சுதுமலை வடக்கு, மானிப்பாய். (2072)

### விறகு

தறித்துத் துண்டு போட்ட ஆலமரம் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: 761, K. K. S. Road. இந்துக் கல்லூரிக்கு முன்பாக வண்ணார்பண்ணை, (2130)

### காணி விற்பனைக்கு

58, சிவன் வீதி, நல்லூரில் 1½ பரப்புக் காணி கிணறு மலசலகூடத்துடன் உடன் விற்பனைக்குண்டு: தொடர்பு J மகேந்திரன் 17 கோவில் வீதி, யாழ்ப்பாணம் அல்லது வின்ரோ, மகேந்திரா நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்: (2082)

ஆனைக்கோட்டை புக்கை நின்விப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீடு, கிணறு, கட்டட 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்: தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. ஜெயசூரியர், மெமோறியல் லேன், மானிப்பாய். (2048)

### கோழிக்குஞ்சுகள் விற்பனை

Hyline சிவப்பு, வெள்ளை. பேடு அதி சிறந்த Sekline பேடு புரொயிலர் Dekalb ஒரு நாள் ஒரு வாரக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதியவும்: P. பத்மநாதன் மாரீசன் கூடல், (சந்திக் கருகில்) இளவாலை (2106)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுன் சேவல் குஞ்சுகள் (cobb) புரொயிலர் குஞ்சுகள் (13-9-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க: இல. 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (2075)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுன் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் 13ஆம் திகதி புதன் கிழமையும் Christombu Farm புரொயிலர் குஞ்சுகள் 14ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராசா & பிறதாஸ் பிரம்படி லேன், கொக்குவில்: (2089)

### தேவை

B M C. Crown Pinion Wheel 41 Teeth Crank Wheel Pinion 7 Teeth full set தேவை தொடர்பு கொள்ளவும்: Samuel, Sons & Co Ltd: 208, Hospital R.d, Jaffna: (C/3649)

அலுவலக பெண் உதவியாளர் தேவை: முற்பணம் கட்டக் கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் A/L சித்தி அடைந்தவராகவும் அலுவலகத்தை திறமையாக நிர்வகிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்: தொடர்பு. ஆ: சி. த: தமிழழகன், மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை: (2115)

### விற்பனையாளர்களே!

உங்களது மோட்டார்கார்கள், மோட்டார் சயிக்கிள்களை உதயனில் பிரசுரியுங்கள்: Lg D Thurasingham, No. 51 Amman Road, Jaffna: (1579)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி 3601)

### புலமைப்பரிசில் பரீட்சை ஆண்டு 5

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை ஒன்பதாவது 10-9-89 ஞாயிறு பி.ப 1 30, பி.ப: 4. 00 மணி நேரங்களில் நடைபெறவுள்ளன பதிவு செய்யவும் சனி: ஞாயிறு 10. 30 — 12. 00 புதன் 8. 00 — 4. 30 ஆண்டு5 புலமைப்பரிசில் Paper class நடைபெறுகிறது புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆசிரியர் பத்திரியடி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்: (2094)

### சேவை

பாவித்த தரமான பொருட்களை வாங்க விற்க அல்லது பொருளுக்குப் பொருள்மாற்றிப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய புதியஸ்தாபனம்: Jeyas Auction Mart, No 161 Main Street, Jaffna: (2116)

திருமண சேவை காணி வாங்கவும், விற்பனை செய்யவும் காணி அளவை படம், வரைதல் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) தமிழ் மன்றி சேவிஸ், ஆ. சி, த: தமிழழகன், மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை: (2113)

### SPOKEN ENGLISH

30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்: நேரம் பகல் 10 - 11: 30மணி ஆரம்பம்: 11- 9- 89 முன்பதிவு செய்தல் வேண்டும்: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர்: (1898)

### இலவசம்

துர்க்கை அம்மன் கோவில் முன்வாசலில் அமைந்துள்ள எமது விளம்பர நிலையத்தில் அன்னுகோப்பியை வாங்கி துர்க்கை அம்மன் சிறிக்கர் கொப்பியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள் அதுடன் நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் வெற்றுப் பைக்கற்றுக்களைக் கொடுத்து ஒரு ரப்பரையும் பெற்றுக் கொள்ளுங்கள்: (சி/3654)

### பற்றறிசார்ஜ்

ஜெனரேட்டரின் உதவியுடன் சகலவிதமான பற்றரிகளும் 24 மணி நேரத்திற்குள் "சார்ஜ்" (Charge) செய்து கொடுக்கப்படும் மெடிக்கல் ஹோல் இல: 224 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்: (சி/3653)

### உடன் விற்பனைக்கு

T. V Sony Triniton colour K. V 2102 GE Antenne V. H. C 17 Booster N. V. 450 B Boby Belling Cooker R. ஷிகரன், 8B, கோவில் வீதி, நந்தாவில், கொக்குவில் கிழக்கு: (2304)

## பத்து குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்

தாவடி, செப் 10

யாழ் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்படும் 10 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 7 500 ரூபாவை வீடமைப்புக் கடனாக 6 சதவீத வட்டிக்கு ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் வழங்கவுள்ளது: (இ-144)

## லொறி விபத்தில் 2 பேர் பலி!

திருமணவைபவம் ஒன்றில் கலந்து கொண்டவர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று முருகந்தஸ்கல் என்ற இடத்தில் குடைசாய்ந்ததில் இருவர் கொல்லப்பட்டனர்: 75 பேர் காயமடைந்தனர்: (எ)

## ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், செப்: 10

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் திரு: வி. எஸ், விவேகானந்த சர்மா உபதலைவர்கள் திரு: பொன் நாகரத்தினம், திரு: எஸ்: இராசலிங்கம், திரு. ஈ. சிவசுப்பிரமணியம் செயலாளர் திரு. செ: அமிர்தலிங்கம், உப செயலர் திரு: சி. மகேந்திரன் பொருளாளர் திரு: சி. அகிலேஸ்வரம், உபபொருளாளர் திரு: சி. கணேஷவேல்:

நிர்வாக சபை உறுப்பினர்கள். திரு: ஆர்: இளையதம்பி, திரு: சேது விபுலானந்தா, திரு: பி. கந்தசாமி திருமதி ஏ, சிவசக்திவேல், திருமதி ரி. யோகேஸ்வரன், செல்வி ரி: உருத்திராதேவி, திரு: மா: கோணேஸ்வரன், திரு: ஆர்: ராஜவிஜயன், திரு. வி. திருச்செல்வம், திரு எம்: பாலகுமார், திரு: க: புவனேந்திரநாதன், திரு. ரி. ஏ. செல்வராஜா, திரு. எஸ்: சிவப்பிரகாசம், கணக்குப் பரிசோதகர் திரு. கே. மார்க்கண்டன், போஷகர்கள்: திரு: சி. சுப்பிரமணியம், திரு வி. சிவசுப்பிரமணியம், திரு: எம் இரத்தினம்: (த)

## மீனவர் கடலுக்கு செல்ல அச்சம்

காரைநகர், செப்10

காரைநகரில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்: மீன்பிடித் தொழிலை ஈடுபட்டிருந்த மீனவர்களை கடற்படையினர் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்தே இந்த அச்சம் நிலவுகிறது:


CITY PHARMACY

சிற்றி பார்மஸி

மானிப்பாய்

பற்சிகிச்சை நிலையம்

பல்வைத்திய நிபுணர்

Dr. S. RAJARATNAM

(L. D. S. M. D. D)

ஞாயிறு. திங்கள், புதன் கிழமைகளில் காலை 9; 00 மணிதொடக்கம் பகல்12; 00 மணிவரை நோயாளர்களைப் பார்வையிடுவார்

EXTRACTIONS, FILLINGS, DENTURES ORTHODORITICS

மற்றும் பற்கள் சம்பந்தமான சகல நோயாளர்களுக்கும் நவீன வசதிகள் கொண்ட ஒரே இடம்

சிற்றி பார்மஸி

பிரதான வீதி, மானிப்பாய்.

(சி/3324)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னும் பெற்றுக் கொள்ளப்படும்:

1. மருந்துவப் பேராசிரியர்
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. கல்வியியல் பேராசிரியர்
4. உடற்குறை அறுவை மருத்துவத்தில் அறக் கொடைத் தவிசு
5. நோயியல் / ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் / உடற்றொழிலியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயிலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம் / சமூக மருத்துவம் / சட்ட மருத்துவம் ஆகியவற்றில் விரிவுரையாளர் / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
6. உடற்றொழிலியல் உதவி விரிவுரையாளர் / தற்காலிக உதவி விரிவுரையாளர்
7. உயிரிரசாயனவியலில் / உடலமைப்பியலில் / தற்காலிக உதவி விரிவுரையாளர்
8. இரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
9. உதவி நூலகர் தரம் II
10. அரபு மொழியியலிலும் இஸ்லாமிய நாகரிகத்திலும் உதவி விரிவுரையாளர் / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
11. பௌதிகவியலில் தற்காலிக செய்முறை காட்டுநர்

சம்பள அளவுத்திட்டம்

பேராசிரியர் தரம் II: ரூபா 12,200 - 6X300- 14,000 (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8000 - 5X250- 9250 (மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4500 - 10 X 200- 6500 (மாதமொன்றுக்கு)

(மருத்துவபீட விரிவுரையாளரொருவர் முதலாவது நியமனத்தின்போது ரூபா 4500/- சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக, அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4900/- ரூபாவில் வைக்கப்படுவர்)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு

உதவி நூலகர் தரம் II: ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு

பௌதிகவியலில் தற்காலிக செய்முறை காட்டுநர்: ரூபா 3250/- மாதமொன்றுக்கு

பேராசிரியர் பதவிகளுக்கும் அறக்கொடைத் தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவு தேதி 1989 நவம்பர் 15ஆம் தேதியாகும்: ஏனைய பதவிகளுக்கு முடிவு தேதி 1989 ஒக்டோபர் 4ஆம் தேதியாகும்:

இவ்வலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்களில் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்; பேராசிரியர் பதவிக்கும் அறக்கொடைத் தவிசுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1 50 முத்திரையொட்டப்பட்ட 23X10 ச. மீ அளவுடைய தபால் உறையும் அனுப்பப்படல் வேண்டும்:

அரசாங்கத் திணைக்களங்கள், அரசு கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் விண்ணப்பதாரிகள் அவற்றின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்:

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படலாம்:

● குறிப்பு: பேராசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்:

—பிரதிப் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்:
1989-09 01

(சி-3335)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



சாமுவேல் அருளுதயராசா
(சுன்னாகம் மக்கள் வங்கிக்-கணக்காளர்)

தோற்றம்: 29- 6- 1941
மறைவு: 10- 9- 1985

பண்பின் சிகரமாய், அன்பின் அரசாட்சியாய், அறிவுப் பேரொளியாய், தியாகத்தின் தீபமாய், கடமையில் கண்ணியமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து ஐந்தாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளத்தை விட்டு எந்நாளும் மாறாது! உங்கள் திருவடிகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்!! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
அம்பலவாணர் வீதி,
[illegible] (1567)

## கேள்வி அறிவித்தல்

### பிரதேசக் கல்வித் திணைக்களம் நல்லூர், யாழ்ப்பாணம் ஆசிய அபிவிருத்தி வங்கி, கல்விப் புனருத்தாரண திட்டத்தின் கீழ்

#### யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி (27 - 09 - 89 ) மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்: ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி (1989 - 09 - 22) பிற்பகல் 2-00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக (ரூபா 50) ரூபா ஐம்பதும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ: 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும்: கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும்: கேள்விகள் 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி (89 - 09 - 27) பிற்பகல் 2-00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும் அச்சமயம் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்:

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்:

கேள்விப் பத்திரங்களுடன் இணைந்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்திசெய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்:

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்:

செல்வி தி. பெரியதம்பி,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்:

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்:

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. யா/நயினாதீவு ம.வி | 48' x 25, இருமாடிக் கட்டிடம் | 500, 000. 00 |
| 2, யா/தையிட்டி ஸ்ரீ கணேச வித்தி | 60' x 20' கட்டிடம் | 200, 000, 00 |
| 3, யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தி | 100' x 20 கட்டடமும் திருத்த வேலைகளும் | 350, 000, 00 |
| 4. யா/மல்லாகம் ம.வி. | 69' x 25' இருமாடிக் கட்டடமும்; 48' x 25' மேல் மாடி மட்டும் | 900, 000, 00 |
| 5. யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி | 100' x 20' கட்டடமும் திருத்த வேலைகளும் | 400, 000' 00 |
| 6, யா/வேலணை சரஸ்வதி வித்தி | 88' x 25' இருமாடிக் கட்டடம் | 900, 000, 00 |
| 7. யா/ நாரந்தனை றோ. க: த: க: பா: | 100' x 20' கட்டடமும் திருத்த வேலைகளும் | 400, 000, 00 |
| 8. யா/பொன் பரமானந்த குவித்தி கும்பசிட்டி | சலகூடம் | 100, 000, 00 |
| 9. யா/ஹாட்லிக் கல்லூரி | தண்ணீர்த்தாங்கி | 150, 000, 00 |
| 10. யா/ உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரி | 90' x 25' இருமாடிக் கட்டடம் இரண்டு | 1, 700, 000, 00 |
| 11. யா/ நெல்லியடி: ம: ம: வி: | 90' x 25' மூன்று மாடிக் கட்டடம் | 1, 500, 000, 00 |
| 12. யா/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி | ,, ,, ,, | 1, 500, 000, 00 |
| 13. யா/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி | 90. x 25' மூன்றுமாடி கட்டடமும் விஞ்ஞான கூடமும் | 1, 500, 000, 00 |
| 14. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி | 40' x 20' விஞ்ஞான கூடம் | 200, 000, 00 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை;

பொருள்:
உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டு விட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் இல்லை.

உதயன்
இல. 393/3, நாவலர் வீதி, தொலைபேசி: 24400
யாழ்ப்பாணம். 22073
10 09 1989 1 செ: இல: 88

## தந்திச் சேவைக் கோரிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீண்டும் தந்திச் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை இந்தக் கோரிக்கையை தபால் தந்தித்துறை அமைச்சரிடம் முன் வைத்துள்ளது.

ஏனைய உலக நாடுகளில் தொலைத் தொடர்பு முறைகள் நவீன மயமாக்கப்பட்டு வருகின்றன: பல்லாயிரக் கணக்கான மைல் தொலைவில் உள்ளோர் தொடிப் பொழுதில் தமக்குத் தேவையான தகவல்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். செய்மதித் தொடர்பு முதல் ரெலக்ஸ், பாக்ஸ் தொலைத் தொடர்பு முறைவரை சர்வ சாதாரணமாகி விட்டன: ஏன், கொழும்பில் கூட வாகனத்தில் பயணம் செய்யும்போதே தொடர்பு கொள்ளும் தொலைபேசி வசதிச் சேவை செய்யப்பட்டுவிட்டது!

ஆனால் தமிழ்ப் பகுதிகளிலோ, மிக அடிப்படைத் தொலைத்தொடர்பு முறையான தபால் சேவை கூட சீராக நடக்க வாய்ப்புகள், வசதிகள் குறைவு: அவசரத்துக்குத் தகவல்களைப் பரிமாறுவதற்கான ஆரம்ப முறைதான் தந்திச் சேவை: ஆனால் அப்படி ஒரு சேவை உண்டா? யாழ்ப்பாணத்திலும் அது நடைமுறையில் இருந்ததா என்று கேட்கும் அளவுக்கு தந்திச் சேவை குறித்து இங்கு மறந்து போயிற்று!!

ஆறு ஏழு வருடங்களுக்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளில் யுத்த நிலைமை உருவானது: அதன் நிமித்தம் பல அனர்த்தங்களும் நடந்தன: அவற்றின் விளைவாக எழுத்தில் வடித்துக் கணக்குச் சொல்லமுடியாத அளவுக்குச் சேதங்கள் ஏற்பட்டன: அந்தச் சேதங்களின் பெறுபேறுகளாக மக்களுக்கு இருந்த ஏராளமான வசதிகள் அற்றுப்போயின: சேவைகள் சீரழிந்தன. உடனடியாகப் புனரமைத்து அல்லது திருத்தி மீண்டும் மக்களுக்கு வசதிகளைச் செய்யமுடியாத மட்டத்துக்கு பல அவசர, அத்தியாவசிய சேவைகள் முற்றாக ஸ்தம்பித்தன:

அவற்றில் தொலைபேசி, தந்திச் சேவைகள், போன்ற தகவல் தொடர்பு - தொலைத் தொடர்பு - வசதிகளும் அடங்கும்: இந்தச் சேவைகளை மீளத் தொடங்குவதில் அரசாங்கம் அக்கறை காட்டாது இருந்து வருகிறது: அதனால் தமிழ்ப்பகுதி மக்கள் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்து வசதி குறைந்த இருண்ட யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!!!

ஏனைய நாட்டு மக்கள் எல்லாம் இருபத்தோராம் நூற்றாண்டின் அதி நவீன, வசதிகள் பொலிந்த வாழ்க்கையை எதிர்பார்த்து முன்னேறி வர, ஈழத்துத் தமிழ் மக்கள் மட்டும் எல்லா வகைகளாலும் பின்னோக்கிச் செல்ல வேண்டி உள்ளது: இந்த நிலை மாற்றி அமைக்கப்படுவது எப்போது?

தொலைத் தொடர்பு வசதிகளைப் பொறுத்தமட்டில், தொலைபேசிச் சேவை இன்னும் சீர்செய்யப்படவில்லை; பெயருக்கு சுமார் 25 லைன்கள் மட்டும் வழங்கப்பட்டன; அவையும் அடிக்கடி செயலற்றுப் போகின்றன; வானொலி அலைத் தொடர்பு அனுராதபுரத்தினூடாக இயக்கப்படுவதால், சீராக இயங்கும் வேளைகளிலும், பல மணி நேரம் காத்திருந்து தான் அவசர தகவலைப் பரிமாறிக் கொள்ள முடிகிறது:

தற்காலிகமாகவாவது நூறு லைன்கள் கொண்ட நேரடித் தொலைபேசி வசதி செய்ய ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறப்பட்டது: இன்னும் செயல்வடிவம் பெறக்காணோம். அதற்கு எத்தனை மாதங்கள் கழியுமோ என்பது எவருக்கும் வெளிச்சமில்லை;

இந்த லட்சணத்தில் தந்திச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதில் அரசு அக்கறை காட்டுமா? அதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமா? இந்தக் கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

தொலைபேசியை விட தந்திச் சேவை சாதாரண மக்களுக்கு மலிவானது: கிராமங்களில் உள்ள தபாலகங்கள் செல்வதோடு காரியத்தை முடிக்கக் கூடியது: சிரமங்கள் குறைந்தது: ஆகையால் தந்திச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

அதற்கான நடவடிக்கைகளைத் தாமதம் இன்றித் தொடங்குமாறு மக்கள் சார்பாக வலியுறுத்துகிறோம்: தந்திகள் தபாலில் செல்வனவாக அன்றி, தபால்களை விட வேகத்துடன் முந்திக் கிடைக்கக் கூடியனவாக இருக்கும் விதத்தில் தந்திச் சேவை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் ரெலக்ஸும், பாக்ஸும் வேண்டும் என்று இப்போது கேட்கவில்லை: தந்தி வசதியாவது செய்து தந்தால் இப்போதைக்குப் போதுமானது எனக் கேட்கிறார்கள்: அந்தக் குறைந்த பட்சத் தொலைத் தொடர்பு வசதியையாவது செய்து கொடுக்கக் கூடாதா?

## துர்க்கையே எழுவாய்!

அழகுடைப் பதியிடை அழகுடைப் பொருளே
எழுகநல் வெழிலுடை இதயமே தருவோம்
வழிபடத் தெளிவுடை வடிவமெய் யுடையாய்
வளமுயர் தெல்லியின் வல்லியே வருவாய்

தொழுபவர் அழுபவர் துயர்களை நீ தருள்வாய்
துலங்குமெய் ஒளியுடைத் துர்க்கையே எழுவாய்
பழிபவ வினைகளைப் பாற்றுக தாயே
பயனுறப் பரவுவம் பக்திமை தருவாய்!

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை
இன்று துர்க்கை அம்மன் பத்தாம் திருவிழா

## சுன்னாகத்தில் அடகு நகை மீளளிப்பு

யாழ்ப்பாணம், செப்:10
சுன்னாகம் மக்கள் வங்கியில் அடகுவைத்தவர்களின் அடகு நகைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி போயா தினத்தன்று வழங்கப்படவுள்ளது (ஒ-10)

## ஹோட்டலில் குண்டு வெடிப்பு

கொழும்பு, செப்;10
காலி நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கடந்த புதன் கிழமை குண்டு ஒன்று வெடித்தது.

கட்டடத்திற்குப் பலத்த சேதமேற்பட்டது; ஆட்சேதம் இடம்பெறவில்லை; வெடிக்காத இன்னொரு குண்டை பாதுகாப்புப் படையினர் அகற்றினர்; (ஒ-எ)

# தும்புத் தொழில் வேலைகள் வடபகுதியில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், செப்10
வட பகுதியில் துரிதமாக வளர்ச்சி அடைந்து வந்த தும்புத் தொழில் வேலைகள் கடந்த சில ஆண்டுகளாக பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளன;

யாழ்ப்பாணத்தில் மட்டும் சிறுகைத் தொழில் திணைக்களத்தின் கீழ் எட்டு தும்புத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன;

தனியார் பலர் இதனைச் சிறு கைத்தொழிலாக மேற்கொண்டிருந்தனர்; ஆனால் தென் பகுதியில் இருந்து கயிறு, தும்புத்தடி போன்றவை பெருமளவில் வட பகுதிக்குக் கொண்டு வரப்படுவதன் காரணமாக வட பகுதியில் இந்த உற்பத்தியைப் பலர் கைவிட்டனர்:

எனினும் சிறு கைத்தொழில் திணைக்களம் தென்பகுதியில் இருந்து தும்புகளை மட்டும் கொள்வனவு செய்து அதன் கீழ் இயங்கும் தும்புத் தொழிற்சாலைகள் மூலம் தும்புத்தடி, கயிறு போன்றவற்றை உற்பத்தி செய்து வருகிறது:

ஒரு கிலோ கயிறு திரிக்க ஒருவருக்கு ஏழு ரூபாவும், தும்புத்தடி ஒன்று செய்ய ஒருவருக்கு 2.50 சதமும் சிறு கைத்தொழில் திணைக்களம் கூலியாக வழங்கி வருகிறது:

தும்புத் தொழிற்சாலைகளில் மேலும் பல ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி அதனை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் தற்போதைய சூழ்நிலையில், அதனைச் செய்ய முடியாத நிலை இருப்பதாக சிறு கைத் தொழில் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்; [த-10]

## பாதயாத்திரை

சாவகச்சேரி, செப்: 10
சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் வருடாந்த மகோற்சவத்தையொட்டி பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது;

ஆத்மஜோதி முத்தையா தலைமையில் இக்குழு இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன்கோவிலில் இருந்து புறப்படும்; (க-81)

## விதை கிழங்கு விநியோகம்; இழுபறிக்கு சுமுகத் தீர்வு

பலாலி) செப்.10
வடபகுதி விவசாயிகளுக்கான விதைஉருளைக்கிழங்கை விநியோகிக்கும் உரிமையில் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் கமநல சேவை நிலையத்துக்கும் இடையில் இருந்து வந்த இழுபறி சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது;

தனியாரால் இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக் கிழங்கை கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிக்கும் உரிமை முன்பு வழங்கப்பட்டிருந்து இடையில் இந்த உரிமை கமநல சேவை நிலையத்துக்கு வழங்கப்பட்டது:

தமது வாடிக்கையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் தாம் அளித்த வாக்குறுதியின்படி விதை கிழங்கை வழங்க அனுமதி அளிக்கும்படி கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டுக் கொண்டன:

இதனை அடுத்து விநியோக உரிமை கூட்டுறவுச்சங்கங்களுக்கே தற்போது வழங்கப்பட்டுள்ளது;

இதனால் கூட்டுறவுச்சங்கங்கள் தம்மிடம் கிழங்குக்கு விண்ணப்பித்த சகலரையும் ரூ 150 முற்பணமாகக் கட்டும்படி கோரி உள்ளன.
(இ- 119)

## யாழ். றோட்டரி கழகத்தின் தொழில் பயிலுனர் திட்டம்

யாழ்ப்பாணம், செப்.10
யாழ். றோட்டரிக் கழகம் தனது 1989- 90ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித்திட்டங்களில் ஆறுமாதகால தொழிற்பயிலுனர் திட்டம் ஒன்றை தொழிற் சேவையின் கீழ் நடத்த முன்வந்துள்ளது:

அக்டோபர் மாதமளவில் இப்புதிய திட்டம் ஆரம்பமாக உள்ளன;

பத்திரிகைத்துறை, அச்சுக் கோர்த்தல், எழுதுவினைஞர் துறை, தட்டச்சுத்துறை, அச்சுக்கலை, படவரைஞர் துறை, கணிய அளவீட்டியல் துறை, இயந்திர உதவியாளர், கண்ணாடி உற்பத்தித் துறை ஆகிய தொழிற்பயிற்சிகள் இத்திட்டத்தில் அடங்குகின்றன:

ஒவ்வொரு துறையிலும் இரு பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்:

இத்திட்டத்தில் சேரவிரும்புவோர் தொழிற்சேவை அதியட்சகர் றோட்டறிக் கழகம், 165- நாவலர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கோரப்படுகின்றனர்:
(இ- எ)

# அத்து மீறிய குடியிருப்புகளால் பல்கலைக்கழக அபிவிருத்தி பாதிப்பு

யாழ்ப்பணம்; செப் 10
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப்பீடம் அமைந்துள்ள வளவுக்குத் தெற்கேயுள்ள 10 ஏக்கர் பரப்புள்ள நிலம் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமானது. இக்காணியில் சுமார் 80 குடும்பத்தினர் வசிப்பிடங்களை அமைத்துக் கொண்டு குடியமர்ந்துள்ளனர்: 1987 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் சட்ட விரோதமான இந்தக் குடியிருப்புகள் மேற்படி காணியில் இருந்து வருவதாலும் நாளுக்கு நாள் இவை அதிகரிப்பதாலும் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது:

மேற்கண்டவாறு தெரிவித்து யாழ் பல்கலைக்கழக உப-வேந்தர் நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான மேற்படி காணியில் முக்கியமாக அபிவிருத்தித் திட்டங்கள் பல இடம்பெறவுள்ளன.

போதனை வைத்தியசாலை, உடற்கல்வி, விளையாட்டிடத் தொகுதி, நீச்சல்குளம், பசிலிபல், மாணவர் விடுதி ஆகியன அமைக்க இக் காணி தேவையாக உள்ளது;

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது:
(இ - 3)

## தராசுகள் - படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள்

### மீண்டும் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்10
யாழ் மாவட்டத்தில் மீண்டும் தராசுகள், படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன: நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1987 அக்டோபர் மாதத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்களை அடுத்து முத்திரையிடும் உபகரணங்கள் சேதமடைந்தும், காணாமல் போயும் உள்ளன;

இதன் காரணமாக கடந்த 2 வருடங்களுக்கு மேலாக இந்த வேலைகள் நடைபெறவில்லை;

டிசம்பர் - ஜனவரி பகுதிகளில் தராசுகள், படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
(இ-9)

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், செப் 10
வட்டுக்கோட்டை மேற்கு களவியோடையம்பதி மோதகமாமரப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், சதுர்த்தித் திருவிழாவும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன;

அன்று பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும், இரவில் முத்துச்சப்பரத்தில் பிள்ளையார் வீதி உலாவும் சிறப்பாக நடைபெற்றன: அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை சகஸ்ர சங்காபிஷேகமும் அன்னதானமும் இடம் பெற்றன. இரவில் விநாயகப்பெருமான் விசேஷ மேளக் கச்சேரி, புரவி நடனம் சகிதம் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்தார்; (அ)

## சமய சந்நிதியில்

## சங்குவேலி பிள்ளையார் உற்சவம்

மானிப்பாய், செப்:10
சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் வருடாந்த பிரம்மோற்சவ விழா இம்மாதம் 6ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகியது:

இம்மாதம் 14ஆம் திகதி வியாழன் பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்; (க- 90)

## செல்வச் சந்நிதியில்

யாழ்ப்பாணம், செப்10
எதிர்வரும் 13ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெற இருக்கின்றன; (து-3)

## சங்காபிஷேகமும் திருக்கல்யாணமும்

நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை மு. ப. 9-00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி ந. ப. 12-00மணிக்கு முருகப்பெருமானுக்கு சங்காபிஷேகமும், பரிவாரமூர்த்திகளுக்குஏகலைச அபிஷேகமும் நாச்சிமாருக்கு விஷேச பூசை ஆராதனையும் நடைபெறும்:

மாலை 3-00 மணிக்கு திருக்கல்யாண வைபவமும் சுவாமி வீதி உலாவரும் காட்சியும் நடைபெறும்; (க)

## இவரின் உயிரைக் காக்க நீங்களும் உதவலாம்

யாழ்ப்பாணம், செப் 10
நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவருக்கு அவசர, அவசியமாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது: மானிப்பாயைச் சேர்ந்த இப்பெண்மணியின் உயிரைக் காக்க அவரது கணவரின் சிறுநீரகத்தை மாற்றிப் பொருத்தலாம் என டாக்டர்கள் சிபார்சு செய்துள்ளார்கள்.

ஆயினும் அந்த மாற்றுச் சிகிச்சையை இலங்கையில் மேற்கொள்ள முடியாது. வெளிநாடு செல்ல வேண்டும்: அதற்குச் சுமார் மூன்றரை லட்சம் ரூபா தேவைப்படுகிறது:

மாற்றுச் சிகிச்சைக்குத் தேவையான பணத்தை திரட்டி வழங்க கொட்டாஞ்சேனை மேற்கு லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

ஒருவரின் உயிர் காக்கும் இந்தத் தர்ம கைங்கரியத்துக்கு நீங்களும் உதவலாம்;

இப்போது ஜா. எலவில் தங்கியிருக்கும் சந்திரா பத்மநாதன் என்ற அந்த நோயாளிக்கு உதவுமாறு [illegible] டாஞ்சேனை மேற்கு லயன்ஸ் கழகம் வேண்டுகோள் [illegible] ளது:

இந்த நிதிக்கு உதவ விரும்புவோர் "Lions Club of Kotahena West" என்ற



பெயரில் "Account Payee" காசோலைகளை லயன் எஸ். சிவபாதசுந்தரம், வேலைத் திட்டத் தலைவர், 4/1, விவே[illegible] கொழும்பு - 6 என்ற முக[illegible] அனுப்பி [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது (அ-க)

## திருமுகம்

### பூநகரித் தபால் சேவை

பூநகரியிலுள்ள பிரதான தபாற் கந்தோருடன் மேலும் எட்டு உபதபாலகங்களுக்கான கடிதங்கள் கிளிநொச்சி மூலமாகப் பெறப்பட்டும் அனுப்பப்பட்டும் வருகின்றன:

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி டிப்போ பஸ்கள் தபால் சேவைக்குப் பொருந்தாத நேரத்தில் சேவையில் ஈடுபடுவதால் தபால் சேவை 24 மணிநேரம் தாமதமாக நடைபெறுகின்றது: சில வேளைகளில் பஸ் வரும் நாட்களிலும் கிளிநொச்சி தபாலகத்திலிருந்து தபால்கள் கொண்டுவரத் தவறிவிடுகின்றன;

இதனால் இப்பகுதி மக்களின் அத்தியாவசிய நேர்முகப் பரீட்சைகள், மற்றும் முக்கிய தேவைகள் கூடத் தடைப்பட்டுள்ளன:

இந்தக் குறைபாடு திருத்தப்படுமா!

து. நர்மலிங்கம்,
பூநகரி.

### காதி அபூபக்கர் வீதி

யாழ்ப்பாணம் சோனகத் தெருவிலுள்ள காதி அபூபக்கர் வீதி பல வருட காலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக உள்ளது:

இதனால் பாதசாரிகளும் வாகனக்காரர்களும் கஷ்டப்படுவதுடன் பல விபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது;

சோனக தெருவில் இவ்வீதி பிரதான வீதியென்பதும் குறிப்பிடத்தக்கது;

இதுவரை காலமும் திருத்தப்படாமல் இருந்த இவ் வீதியை இனிமேலாவது திருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

ஐ. ஜன்சில்,
யாழ்ப்பாணம்.

### பாரபட்சம்

அண்மையில் நாகர்கோயில் கொத்தணிப் பாடசாலைகள் பலவற்றிற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளது. பல வருடங்களாக தளபாட வசதி இன்றிக் காணப்படும் யா/ மணற்காடு றோ. க. த. க. பாடசாலையில் ஆண்டு ஒன்று முதல் ஐந்து வரையான மாணவ மாணவிகள் தமது பாடசாலைச் சீருடையுடன் நிலத்தில் அமர்ந்து கல்வி கற்க வேண்டியுள்ளது: இதே போல் அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்களிலும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது: இதே சமயம் இக்கொத்தணிக்குள் அமைந்த சில பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமென மணற்காடு மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்;

செல்வி இ. றெமிஞ,
மணற்காடு.

## கண்டதும் கேட்டதும்

நமது சமுதாயத்தில் உள்ள சாபக்கேடுகளில் மதுவும் ஒன்று: மதுவால் சீரழிந்த - சீரழியும் குடும்பங்கள் ஏராளம்:

மது அருந்துவோர் பலரகம்; சிலர் தமது வீடுகளில் மட்டும் அருந்துவார்கள்: தவறணைகளில் அருந்துவார்கள்; வீடுகளில் தொடமாட்டார்கள்;

இன்னும் ஒரு ரகத்தினர் இருக்கிறார்கள் வீடுகளிலும் அருந்துவார்கள்: தவறணைகளிலும் அருந்துவார்கள்: பயணத்தின் போதும் விடமாட்டார்கள்: சிறிய போத்தலில் எடுத்துச் செல்வார்கள்;

கடந்த வியாழக்கிழமை யாழ். பெரியாஸ்பத்திரி வார்ட் ஒன்றில் ஒரு சம்பவம் நடைபெற்றது: நோயாளி ஒருவர் பிரண்டிப்போத்தலுடன் இருந்ததை ஆஸ்பத்திரி ஊழியர்கள் சிலர் கண்டு பிடித்தனர்:

டொக்டருக்கும் முறையிடப்பட்டது:

இது ஒரு சம்பவம்! ஆனால் கண்டும் காணாமலும் இப்படி எத்தனையோ சம்பவங்கள்!!

— செந்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள் இன்றேல் வடக்கு - கிழக்கு நிலைமை ஏற்படும்

## ஈ. ஜ. மு. மலையக எம். பி. கன்னிப் பேச்சு

மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள் இல்லையேல் வடக்கு - கிழக்கு நிலைமை மலையகத்திலும் தோன்றலாம்.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் எம். பி. திரு. மலையப்பன் இராமலிங்கம் (மலையகம்) நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய கன்னிப் பேச்சில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இராமலிங்கம் மேலும் பேசியதாவது:-

என்னை இங்கு அனுப்பி வைத்ததற்காக நான் முதலில் வடபகுதி மக்களுக்கும் ஈழவர் ஜனநாயக முன்னணிக்கும் மற்றும் அரசியல் தலைவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

முதலாவது நாடாளுமன்றத்தில் மலையக மக்களை எட்டு எம். பி.க்கள் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

40 ஆண்டுகளுக்குப் பின்னர் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்த ஒருவரும் தெரிவு செய்யப்படவில்லை.

பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் கூட மலையகத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தான் நடத்துகின்றன.

இன்று நிலையற்ற தன்மை தான் மலையகத்தில் காணப்படுகிறது. விரக்தி அடைந்த இளைஞர்கள் ஆயுதத்தை தூக்குகின்றனர்.

என்னை நாடாளுமன்றத்தில் வழிநடத்த மலையகத்தில் இருந்த தெரிவான எம். பி.க்கள் இங்கு இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன்.

நாடாளுமன்ற நடைமுறையில் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டார்களா?

கடந்த 40 ஆண்டுகளாக நாட்டை ஆண்டு வந்த மலையகத்தின் பாரம்பரிய தலைவர்களில் ஒருவர் கூட இன்று நாடாளுமன்றத்தில் இல்லை.

தோட்டங்களில் கூட மலையக இளைஞர்களுக்கு வேலை வழங்கப்படுவது இல்லை.

பிரசா உரிமை வழங்கப்பட்டது பெயரளவில்தான்.

தனியார் தோட்டங்களில் தொழிலாளர்கள் அடிமைகள் போன்று நடத்தப்படுகின்றனர்.

மலையகத்தில் அகதிகளாக உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் நிவாரண உதவிகள் அவர்களுக்குக் கிடைக்க வழி செய்யப்படவில்லை.

வழங்கப்பட்ட பத்து லட்சம் வீடுகளும் ஒன்றுகூட மலையகத்தவருக்கு வழங்கப்படவில்லை. சுயதொழில் ஆரம்பிக்க வங்கிகள் கடன் வழங்குவதில்லை. மலையகத்தவருக்கு ஜனசக்தி உதவி இல்லை.

மலையகப் பாடசாலைகளில் கணித விஞ்ஞான ஆசிரியருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. பெண்களுக்குரிய சம்பளம் வழங்கப்படுவதாக இல்லை. சம்பள நிர்ணயசபை தனது கடமையைச் செய்யவில்லை.

1978 - 1987 வரை தேயிலையால் கிடைத்த லாபம் 400 கோடி ரூபா ஆகும். அதில் ஒரு சதம் கூட தொழிலாளருக்காகச் செலவழிக்கப்படவில்லை.

இப்படி திரு. இராமலிங்கம் தனது பேச்சில் குறிப்பிட்டார். (இ - ள)


## வைத்திய சேவை

அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் சகலரோகங்களுக்கு பூரண நிவாரணம் அளிக்கப்படும்.

தொடர்பு:

**ஸ்ரீசத்திய**
**சகலரோக சிகிச்சைநிலையம்**

207/6, காரைநகர் வீதி, வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

43, ஜின்னா வீதி, சோனக தெரு, யாழ்ப்பாணம்.

(இ/3330)



மானிப்பாய் இந்துக்கல்லூரி
பாடசாலை அபிவிருத்திசங்க வருடாந்த

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 24/9/89 ஞாயிற்றுக்கிழமை காலை 10: 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் தவறாது சமூகம் அளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

அதிபர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

(சி/3328)


## 6ஆம் மாத திதி நினைவஞ்சலி



**செல்வன் நாகலிங்கம் சிவகுமாரன்**
(சந்திரன்)

தாய்மடியில்: 10-06-1969

தாயகமடியில் 15-02-1989

மறக்குலத்து மைந்தன் சந்திரனுக்கு
ஆறுவது மாத நினைவஞ்சலி

பாசமுள்ள தமிழ்தாய் மகனே எங்கு நீ சென்றாய்
என்நாடு என்னுரிமை என்மொழியே எனச் சாற்றி
மனுக்குலத்துக்காய் உழைத்த மறக்குலத்து மைந்தன்
தமிழ் தாக மீட்புக்கு சங்கோசை எழுப்பிய நீ
மாசியிலே அர்ப்பணமாகி விட்டியே
உன்னை எப்போது நாங்கள் காண்பதோ
ஆறு மாதங்கள் ஆனாலும் மாறுமோ .........
உன் நினைவலைகள் எம்மைவிட்டு அகலவில்லையே!

உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, அக்கா,
தம்பி.

இலந்தைசாலை,
காரைநகர்.

(2032)

## ஷெல்லினால் மின்கம்பிகள் அறுந்தன

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் ஏவப்பட்ட ஷெல்லினால் தம்பசெட்டி வீதியில் உள்ள மின் இணைப்புக் கம்பிகள் அறுந்து விழுந்தன.

மேலும் வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள ஆலயத்தின் ஓரத்தில் விழுந்து வெடித்த மற்றொரு ஷெல்லினால் பல மரங்கள் முறிந்தன. தம்பசெட்டி வீதியோரத்தில் அமைந்த கந்தசாமி கடை சிறிது பாதிக்கப்பட்டது எனத் தெரிகிறது.

(அ 118)

## திருநெறி மன்ற ஆரம்ப விழா இன்று

வட்டுக்கோட்டை கோயிற்பற்று திருநெறி மன்றத் தொடக்க விழாவும், பெரியார் க. நாகலிங்கம் அமரத்துவப் பொன்விழாவும் இன்று வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

சேவைக்கு ஒரு நாகலிங்கம் என்ற தலைப்பில் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. பெ. கனகரத்தினம் பொன்விழா உரை நிகழ்த்துவார்.

வட்டுக்கோட்டைக் கலைநிலையக் குழுவினரின் இசை ஆங்கும் திருநெறிமன்றத்தலைவர், வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வர் திரு. க. கயிலாதயநாதனின் பாரதியும் வாரிதியும் என்ற தலைப்பிலான சங்கீத கதாப்பிரசங்கம் பக்கவாத்தியங்களுடனும் இடம் பெறும். (த)

## 75 பேர் கைது!

கொழும்பு, செப் 8

நேற்று மாலை நான்கு மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 75க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர் என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது. (இ)


## ஜேர்மன் - வாராந்தப் பயணம்

(கடவுச்சீட்டுத் தந்து ஒரு வாரத்தில் பயணத்தை மேற்கொள்ளலாம்)

★ Papua New Guinea
(பப்போ நியூ கினியா) Labourer 1000 USD

★ சிங்கப்பூர் தாதிமார்
(ஏழு வெற்றிடங்கள் மட்டுமே உண்டு)
பணிப்பெண்கள் — 4800/-

அவுஸ்திரேலியா குழுவின் பயண முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

குறிப்பு: எந்த நாட்டுக்கும் முற்பணம் அறவிடப்படமாட்டாது PASS PORT - BOND உடன் செய்து கொடுக்கப்படும்.

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

**நிரோஷன் என்ரபிறைஸ்**

பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி காங்கேசன்துறை

(இ/8610) (T. B. வைத்தியசாலைக்கு முன்பாக)


## நகரசபை, வவுனியா

# கேள்வி விளம்பரம்

கீழ்க் காணப்படும் அட்டவணையில் உள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இணைப் பிரதிகளில் 09 - 10 - 1989 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணி வரை அரசாங்கத்தில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் அல்லது கூட்டுத்தாபனத்தில் ரூபா 3600000/- க்கு (முப்பத்தாறு இலட்சம்) அல்லது அதற்கு மேல் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமும் செலுத்தப்படுவதன் பேரில் 28 - 09 - 1989 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள், கேள்வி நிபந்தனைகள், வரைபடப் பிரதிகள் ஆகியவை நேரடியாக விநியோகிக்கப்படும். சித்திபெற்ற ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப் பத்திரத்தில் கைச்சாத்திட்ட பின்னரும், எம்மால் வழங்கப்பட்ட வரைபடப் பிரதிகள் ஆகியன திரும்பக் கையளிக்கப்பட்ட பின்னருமே கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கப்படும்.

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு, "செயலாளர், நகரசபை, வவுனியா" என விலாசமிடப்பட்டு 09 - 10 - 1989 ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது வவுனியா நகரசபை அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நவீன சந்தை கட்டிட மீளமைப்புக்கான கேள்வி" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் 09 - 10 - 1989 ஆம் திகதி பிற்பகல் 2-15 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட முகவர் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவர்.

கேள்விக்காரர் கேள்வி விளம்பரம் மற்றும் கேள்விக் கட்டுப்பாடுகளுக்கமைய ஒழுக வேண்டும் கேள்விகளை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ நகரசபைச் செயலாளருக்கு உரித்துண்டு.

கேள்விதாரர் தனியார் கம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளர்களினதும் பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|
| நவீன சந்தைக் கட்டட மீளமைப்புக்கான வேலை கட்டம் 1, 11 | ரூ. 750/- | ரூ. 36000/- |

செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா. 8. 9. 89

(இ/3327)


## வடக்கு - கிழக்கு மாகாண அரசு திட்டமிடல், இளைஞர் விவகார மனிதவள அமைச்சு

I. பதவி வெற்றிடம்:-
போதனாசிரியர்கள் (ஒப்பந்தம்)

வடக்கு கிழக்கு மாகாண அரசின் திட்டமிடல், இளைஞர் விவகார, மனிதவள அமைச்சினால் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இளைஞர்களுக்கு சுயதொழில் அடிப்படையில் தொழிற் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் பின்வரும் தொழில்களில் பயிற்சி வழங்குவதற்கு போதனாசிரியர்களின் சேவை ஒப்பந்த அடிப்படையில் வேண்டப்படுகிறது.

01. விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள், பழுது பார்த்தல், பராமரித்தலும்
02. ஒட்டுவேலை (வெல்டிங்)
03. உடைதயாரித்தல் (ரெயிலறிங்)
04. மரவேலை
05. தொலைக்காட்சி, வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தலும், பராமரித்தலும்
06. மேசன் வேலை
07. இயந்திரவியல்
08. சிகையலங்காரம்
09. உடையலங்காரம்
10. குடும்ப சுகாதாரம்
11. சத்துணவு
12. வீடுகளுக்கான மின்னிணைப்பு
13. துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தலும், பராமரித்தலும்
14. வள்ளங்களுக்குப் பொருத்தப்படும் எஞ்சின்களை பழுது பார்த்தலும், பராமரித்தலும்

II. தகைமைகள்:-

(அ) இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
(ஆ) வயது எல்லை பதினெட்டிற்கும் நாற்பதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(இ) நற்குணம் உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) விண்ணப்பிக்கும் தொழிற் பயிற்சிநெறி சார்ந்த துறையில் ஏதாவது ஒரு அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் ஆறு மாதத்திற்கு மேற்பட்ட கால பயிற்சி நெறி ஒன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(உ) குறித்த துறையில் அனுபவம் உடையோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் செயலாளர், திட்டமிடல் இளைஞர் விவகார மனிதவள அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாண அரசு, 96, உவர்மலை, திருகோணமலை என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் 30 - 09 - 1989 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, தொழிற் பிரிவு என்பன குறிப்பிடப்பட வேண்டும்.

செயலாளர்
திட்டமிடல் இளைஞர் விவகார
மனிதவள அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண அரசு,
திருகோணமலை.

(இ-3326)


## 47 ஆம்நாள் நினைவஞ்சலி



**செல்வன் சி. கணேசநாதன்**
(அப்பன்)
(ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன்)

அன்னையின்மடியில்: 27 - 07 - 1967

ஆண்டவன் அடியில்: 26 - 07 - 1989

எமதருமை அப்பனேயுன் அன்பு மொழியால்
எம்மையெல்லாம் மகிழ்வித்து தென்றல் காற்றாயிருந்தாயப்பா
உன் வண்ணக்கனவினிலே பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று
பெற்றோரை சோதர சோதரியரை சிறப்புடனே
வாழவைப்பா யென்றெண்ணி யிருக்கையிலே
புயலொன்று வீசியதே யுனையின்று காணாது தவிக்கின்றோமே.

நீங்காத நினைப்புக்களைத் தந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உன்பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

கிராமக்கோட்டடி,
புலோலி தெற்கு,
புலோலி.

(2064)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள்வங்கி அடகு நகைகள் 13ஆம் திகதி முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், செப்: 10 சாவகச்சேரி, பளை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களின் அடகு நகைகள் இம்மாதம் 13ஆம், 14ஆம், 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் வழங்கப் படவுள்ளன.

சாவகச்சேரிப் பகுதி மக்களினது அடகு நகைகள் மேற்கூறிய தினங்களில் யாழ்: பிரதான வீதி, மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படும்.

பளைப் பகுதி மக்களினது அடகுநகைகள் 13ஆம், 14ஆம் திகதிகளில் யாழ்: ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படும்.

யாழ்: நவீன சந்தை மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைத்தவர்களின் நகைகளும் 18ஆம், 14ஆம் திகதிகளில் அதே வங்கியில் வைத்து வழங்கப்படும்.

அடகு நகைகளைப் பெறச் செல்லுபவர்கள் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஸுக்களையும் எடுத்துச் செல்லுமாறு யாழ்: மக்கள்வங்கி பிரதேச முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ- 10)


## கப்பலில் வேலைவாய்ப்புகள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு

1. Second Officer 2. Third Officer
3. Second Engineer 4. Third Engineer
5. Radio Officer
6. Bosan 7. A. B 8. Oiler

அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

முகவரி

NATIONAL SHIPPING & TRAVELS
New Lalitha Building
185/2 Kasthuriar Road,
Jaffna.

(3602)


## வெற்றிடவிவரம்

பச்சிலைப்பள்ளி செப்10 உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவினால் பரிபாலிக்கப் படும் உத்தியோகஸ்தர்களின் வெற்றிடங்கள் பற்றிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண அரசின் உள்ளூராட்சிச் சேவைகள் திணைக்கள பணிப்பாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

# மின் தடை திட்டமிட்ட செயல்; மாங்குளம் ரெலோ பொறுப்பாளர் கூறுகிறார்

மாங்குளம், செப்10 வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் ஈழமக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைத்து அவர்களை நிர்க்கதிக்குள்ளாக்கும் திட்டமிடப்பட்ட செயலே மின்தடை.

மாங்குளம் வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தமிழ் ஈழ விடுதலை இயக்க மாங்குளம் பொறுப்பாளர் திரு: குகன் மேற்கண்டவாறு கூறினார்.

தங்கள் வாழ்க்கையை சீராக ஓட்டிச் சென்ற தமிழ் மக்கள் மின்தடை காரணமாக தற்போது பெரும் அலைக்கழிக்கப் படுகின்றனர்.

கடும் நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையை நாடிச்செல்லும் நோயாளிகள் மின்தடையால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

ஈழமக்களுக்குஒளிகொடுத்து உதவ இந்தியா முன்வர வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

## ● ஒரே நிறுவனமாக இயங்கும்

கொழும்பு, செப்: 10 தனித்தனியாகச் செயற்படும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தையும் தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தையும் ஒரு நிறுவனமாக மாற்றுவது என்று அரசு தீர்மானித்து உள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் அரசு இந்த முடிவை எடுத்தது.

இந்த முடிவு தனியார் காப்புறுதி நிறுவனங்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ-எ)

## வடிசாராய வேட்டை

முல்லைத்தீவு, செப்: 10 முல்லைத்தீவு செல்வபுரத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் அண்மையில் நடத்திய தேடுதலில் வடிசாராயம் விற்றவர்கள் வடித்தவர்கள் அனைவரையும் கைதுசெய்ததுடன்வடிசாரயம் வடிக்க உதவிய உபகரணங்களையும் கொண்டுசென்றனர். (க - 92)

## காயம்

யாழ்ப்பாணம், செப்: 10 தணுக்காய்ப் பகுதியில் ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

சிதம்பரப்பிள்ளை கந்தையா (வயது 35) என்பவர் இதனால் காயமடைந்தார்.

கடந்த ஐந்தாம் திகதி இச்சம்பவம் நடைபெற்றது. (இ-10)

## சங்கானை ப. நோ. கூ. ச. தேர்தல்கள்

சுழிபுரம், செப்: 10 சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுத் தேர்தலில் முப்பத்திரண்டு கிளைகளில் முப்பது கிளைகளுக்கு வட்டியின்றி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டன.

இரண்டு கிளைகளுக்கு நியமனப் பத்திரம் கொடுக்க எவரும் முன்வரவில்லை; இதனால் இரண்டு கிளைகளிலும் தெரிவு நடைபெறவில்லை; போட்டி நடைபெறாத கிளைகள் பொன்னாலை, சங்கரத்தை ஆகிய இடங்களாகும்.

சங்கத்தின் தற்போதைய தலைவராக இருக்கும் திரு: மா: சற்குணசிங்கம் பண்ணாகம் கிளை ஐந்தில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க-28)


## நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

விஞசித்தம்பி கணபதிப்பிள்ளை

மலர்வு: 05- 04- 1916 உதிர்வு: 13- 08- 1989

உங்கள் அன்பு மனைவிக்குப் பண்புள்ள கணவனாய்!
எங்கள் குழந்தைகளுக்குப் பாசமுள்ள தந்தையாய்!
பிறந்த வீட்டிற்கும், புகுந்தவீட்டிற்கும் குலவிளக்காய்!
பகைவரின்றிப் பலருடனும் பண்பாய் வாழ்ந்த எங்கள் வீடு
உங்கள் பிரிவால் இன்று பாலைவனம்!
நீங்கள் போன இடம் என்றும் சோலைவனம்!
நாமிருக்கும்வரை உங்கள் புகழ் என்றும் வாழும்.

அன்னார் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 16- 8- 89 அன்னாரது சமக்கிரியையில் கலந்து கொண்டும், கடிதத்தொடர்பு மூலம் துக்கம் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் குடும்ப சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம். இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ள வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/3648)


# புரட்சிகர மார்க்கத்தைக் காட்டிய அமரர் 'கம்யூனிஸ்ட்' கார்த்திகேசன்

## இன்று அவரது நினைவு தினம்

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் சிங்களமக்கள் மத்தியிலும் குறிப்பாக முற்போக்கு எண்ணம் கொண்ட சகலரின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமான திரு பெரியார் அமரர் மு: கார்த்திகேசன்.

சிறந்த கம்யூனிஸ்ட்டாகவும், மதிப்புமிக்க ஆசிரியனாகவும் ஆற்றல்மிக்க பேச்சாளனாகவும் ஒரேசமயத்தில் திகழ்ந்த அமரர் மு. கார்த்திகேசன் மறைந்து இன்றுடன் பன்னிரண்டுஆண்டுகள் நிறைவடைகின்றன.

சமூகத்தின் அடித்தட்டில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கும் சமூகத்தின் பல்வேறு தரத்தைச் சேர்ந்தோர்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவை காரணமாகவும்உடை, நடை பாவனையில் முன்னுதாரணம் மிக்க அரசியல்வாதியாகவும் எவ்வித படாடோபமும் இன்றி வாழ்ந்தமையாலும் இந்நாட்டின் சகல பிரிவினர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

யாழ் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அவரிடம் கல்வி கற்ற மாணவர்களாக இருந்தாலும்சரி; கம்யூனிஸ்ட் கார்த்திகேசனிடம் அரசியல் கற்ற மாணவர்களாக இருந்தாலுஞ்சரி அவர்கள் எல்லோரும் இன்று பல்வேறு துறைகளிலும் நன்கு பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவரது இலட்சியங்களை அடையும் மார்க்கத்தில் தம்மை அர்ப்பணித்து மக்களின் நலன்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரதுஉள்ளத்திலும் நடைமுறையிலும் அவரது ஆளுமையின் முத்திரைகள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அமரர் கார்த்திகேசனை இலங்கையின் பல உயர்பதவிகள் வகிக்கும் அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள், மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்விமான்கள் தொட்டு யாழ்ப்பாணத்து மாநகரசபையின் நகரசுத்தித் தொழிலாளர்வரை அனைவரும் தங்களில்ஒருவராகவே அவரைக் கருதி வந்தனர்.

அமரர் கார்த்திகேசன் தனது சிறுபராயத்தைச் சிங்கப்பூரில் கழித்துவிட்டு நாடு திரும்பிப் பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு இன்றைய பல்கலைக்கழகத்தின் முன்னோடியாகிய இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் இணைந்து ஆங்கில சிறப்புப் பட்டத்திற்கான கல்வியை மேற்கொண்டார்; இவருடன் அக்காலத்தின் பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களாக இருந்தவர்கள் இந்தநாட்டின் பிரதமராகவும், பேராசிரியர், அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர் போன்ற பல்வேறு உயர்பதவிகளை வகித்தனர்.

ஆனால் அமரர் கார்த்திகேசன் அவர்கள் தனது உயர்கல்வியை முடித்துக்கொண்டசமயம் பல உயர் பதவிகள் அவரை நாடிவந்தபோதிலும் அவர் அப்பதவிகளில் நாட்டம்கொள்ளவில்லை. மாறாக அக்காலத்தில் கம்யூனிஸ்ட்கட்சியின் தோற்றத்திற்கு முன்னோடியாக இருந்த ஐக்கிய சோஷலிசக்கட்சியில் தன்னை ஒரு முழுநேர ஊழியனாக இணைத்துக் கொண்டார்; இதன்பின்னால் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்து தனது இறுதிமூச்சுவரை தான் கொண்ட இலட்சியத்தை நிலை



மு. கார்த்திகேசன்

நாட்டுவதற்காகவே செயற்பட்டவர்.

ஆரம்பகாலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார ஏடான 'போவேட்டின்' ஆசிரியராக இருந்து தனது ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்தியது மட்டுமன்றி அக்காலத்தில் இருந்த மிகக்குறைந்த அச்சியந்திர வசதிகளோடு தமது உடலுழைப்பையும் செலுத்தி பத்திரிகை அச்சிட்டது மாத்திரமன்றி மக்கள் குழுமியிருக்கும் பகிரங்க இடங்களில் அப்பத்திரிகைகளைத் தாமே கொண்டுசென்று விற்பனை செய்துவந்தார்.

நாட்டின் மிகச்சிறந்த அறிவாளிகளையும் புத்திஜீவிகளையும் செயல்வீரர்களையும்மட்டுமன்றி இன்று அரசியலில்முன்னணியில் திகழும் ஓர் இளைய சக்தியையும் உருவாக்குவதில் அவர் ஆற்றிய பணிமிகஉயர்ந்ததாகும்.

இன்று நாட்டிலுள்ள சகல துறைகளிலும்உள்ளவர்களால் வியந்து பாராட்டப்படும் அறிஞர் கைலாசபதி அவர்களும் கார்த்தியால் உருவாக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்டவர்கள்

- எஸ். சிவதாசன் -

என்பது யாவரும் அறிந்ததே; அத்தோடு இன்று இலக்கியத் துறையில் தமக்கெனத் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ள திருவாளர்கள் டொமினிக்ஜீவா, டானியல், பொன்னுத்துரை, பெனடிற்பாலன், நீர்வை பொன்னையன் போன்றோரும் இவரால் வளர்க்கப்பட்டு வழிகாட்டப்பட்டவர்கள் என்பது இங்குகுறிப்பிடத்தக்கது.

எந்தவித படாடோபமுமின்றி மிகவும் எளிமையான தோற்றத்தோடு ஓர் பழைய துவிச்சக்கரவண்டியில் போக்குவரத்துச் செய்யும் கார்த்திகேசனை சாதாரண ஏழைப் பொதுமக்கள் தாம் சந்திக்கும் இடங்களிலேயே உரிமையோடு நிறுத்தி தமக்கு வேண்டிய விண்ணப்பங்களை எழுதுவித்துக் கொள்வது வழக்கம். எத்தகைய சூழ்நிலையிலும் பொதுமக்களின் அன்பான வேண்டுகோள்களை மிகவும் பொறுமையுடன் கேட்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதிலும் உடனுக்குடன் வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பதிலும் ஓய்வின்றி உழைத்த பண்பாளர்.

1953 ஆம் ஆண்டில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அன்றைய சகாவான துரைராசாவை யாழ் மாநகர சபைத் தேர்தலில் தோற்கடித்து முதன்முதலில் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது வெற்றியை பல்வேறுபட்ட சமூகப் பிரிவினரும் குதூகலத்தோடு வரவேற்றனர்.

தனியொரு கம்யூனிஸ்ட்டாக நகரசபைக்கு [illegible] அமரர் கார்த்திகேசன் தனது வாதத்திறமையாலும், தம் மீது ஏனைய உறுப்பினர் கொண்டிருந்த மதிப்பின் காரணமாகவும் தம்மோடு ஐக்கியப்படுத்தக்கூடிய சகலரையும் ஐக்கியப்படுத்தி முஸ்லிம் உறுப்பினரான ஜனாப்: எம்: எம்: சுல்தானைத் தாமே பிரேரித்து யாழ்ப்பாணத்தின் நகராதிபதியாக்கினார்.

தனது அரசியல் வாழ்வின் ஆரம்பம் தொடக்கம் இறக்கும்வரை சாதியின் பெயரால் ஒரு பகுதி மக்கள் அடக்கியொடுக்கப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சகல போராட்டங்களோடும் இணைந்து நின்றதும் அல்லாமல் அவ்வியக்கங்களை வெற்றியை நோக்கியும் வழிநடத்தினார்; இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் இன்றைய கொள்கையற்ற சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளைப் போலன்றி எத்தகைய அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலத்திலும் அப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து கட்சியின் கருத்துக்களை முன்வைத்தது மட்டுமன்றி அவற்றுக்காக இடையறாது போராடிய நேர்மையான அரசியல்வாதி.

சோசலிச சமூக அமைப்பை நோக்கிய போராட்டமாகியது விரிவடைந்து வளர்ந்து முன்னேறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரது அரசியல் மாணாக்கரில் பலர் அவர் காட்டிய புரட்சிகர மார்க்கத்தில் முன்னேறுவது கண்டு நாம் பெருமைப்படுவதோடு அவ்வகையில் நாமும் தொடர்ந்து முன்செல்வோம்; அதுவே நாம் அவருக்கு வழங்கும் கௌரவமாகும்.

சொந்தக்கள் சுகங்களை நாடாது அரசியல் வாழ்வுக்கும் சொந்த வாழ்வுக்கும் இடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு தனது சொந்த நலனிலும் பார்க்க தேசத்தினதும் மக்களினதும் நலனை முழுமையாக நேசித்து, இந்நாட்டு மக்களை முதலாளித்துவ சமூக அமைப்பிலிருந்து பூரணமாக விடுவிப்பதில் அல்லும் பகலும் ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்த அமரர் கார்த்திகேசன் இன்று புதிய உணர்வோடு வளர்ந்து வரும் புதிய தலைமுறையினருக்கு [illegible] விளங்குவார் என்பது திண்ணம். ★

# மகாகவியின் "புதிய தொரு வீடு" மீண்டும் மேடையேறுகிறது

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இன்று 10-09-89 காலை 8-30 மணிக்கு மஹாகவியின் "புதிய தொரு வீடு" பா நாடகம் மேடையிடப்படுகிறது. தொடர்ந்து இந்நாடகம் இன்று 2-30, 16-09-89காலை 9-30 பிற்பகல் 2 - 30க்கு மேடையிடப்படும்: இதைத் தயாரித்தளிப்பவர்கள் யாழ்: பல்கலைக் கழக நுண்கலைத் துறையினர். நுண்கலைத்துறை விரிவுரையாளர்களான கலாநிதி சி. மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகிய இருவரும் இந்நாடகத்தை நெறியாள்கை செய்கின்றார்கள்.

கவிஞரான மஹாகவி அவரது கோடை, புதியதொருவீடு எனும் முழுநீள மேடைப் பா நாடகங்கள் மூலம் நாடக ஆசிரியராகவும் அறிமுகமானார். கோடை 1960 களின் பிற்பகுதியில் மேடை கண்டது; புதியதொரு வீடு 1971 இல் முதன் முதலில் மேடை கண்டது: இவ்விரு நாடகங்களையும் முதன் முதலில் நெறியாள்கை செய்தவர் அ. தாசீசியஸ் அவர்.

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதியில் வாழும் மக்களிடையே "புதியதொரு வீடு" ஒரு குடும்பத்தில் நிகழ்ந்த சம்பவமே நாடகத்தின் கரு; இனிமையான பாடல்களும், அர்த்தம் மிக்க வசனங்களும், இந் நாடகத்திற்கு வலுவூட்டுவன.

சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும் சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும் என்ற பிரசித்தமான மஹாகவியின் பாடல் இந் நாடகத்திற்குரியதே.

அ. தாசீசியஸ் தொடர்ந்து இந்நாடகத்தை நெறியாள்கை செய்தவர், சி. மௌனகுரு 1978 இல் சி. மௌனகுரு யாழ் பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்டு இதனைத் தயாரித்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் அரங்கேற்றினார்.

பின்னர் இந் நாடகம் மன்னாரின் பிரிவிலும் யாழ்ப்பாண நாடகக் கல்லூரிக்காக ஹேமனுலும், இலவாலை செல் ஹென்றிஸ் பாடசாலைக்காக பீ. ஏ. சி. ஆனந்தராசாவினாலும் தயாரிக்கப்பட்டது. இவ் வகையில் பல நெறியாளர்களினால் நெறியாள்கை செய்யப்பட்ட பல நடவைகள் மேற்கண்ட நாடகம் என்ற சிறப்பு புதியதொரு வீட்டுக்கு உண்டு.

இந் நாடகத்தை யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறை மீண்டும் மேடையேற்றுகிறது.

யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் நுண்கலையும், நாடகமும், அரங்கியலும் பட்டப்படிப்புக்கான பாடங்களாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன: நாடகமும் அரங்கியலும் க. பொ. த. உயர்தர வகுப்புக்கு ஒரு பாடமாகவும் உள்ளது. இத்துறையிற் பயிலும் மாணவர்களுடன் யாழ் பல்கலைக்கழகத்தின் ஏனைய துறை மாணவர்களையும் இணைத்து இந் நாடகத்தை தனது முதல் தயாரிப்பாக நுண்கலைத் துறை வழங்குகிறது.

இந் நாடகத்துக்குப் பிரபல இசை அமைப்பாளர் கண்ணன் இசை அமைத்துள்ளார்.

வாழ்க்கையின் நம்பிக்கையையும் வாழவேண்டும் என்ற உறுதியையும் தரும் இந் நாடகம் வேகமாக வளர்ந்து வந்து இடையில் தடைப்பட்டு நின்ற தமிழ் நாடக உலகுக்கு மீண்டும் நம்பிக்கையையும் உறுதியையும் தரும் என நம்புகிறோம்.

— "வைரமணி"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி நிறுவுனர் நினைவு மலர் (10-09-1989)

## மழவராயருக்கு விழா; செய்நன்றி மறவாச் செயல்!

செப்ரெம்பர் 10 ஆம் திகதி சைவப் பெரியார் அறவள்ளல் அமரர் மழவராயர் கந்தையாவின் ஜனன தினமாகும். சிறப்பு மலர் வெளியிட்டுப் புத்தூர் சிவன் தேவஸ்தானத்தில் பிரார்த்தனைகளோடு விசேச பூசை நடத்தியும் கல்லூரி தர்மகர்த்தா சபை இவ்விழாவைக் கொண்டாடுவது மிகச் சிறப்புடையதாகும். கல்லூரி அதிபர் திரு: நா: கணேசபிள்ளையையும் கல்லூரி ஆசிரியர்களையும், மாணவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

அமரர் மழவராயர் கந்தையா தான் ஈழமணித் திருநாட்டில் டாக்டர் சி: டபிள்யூ: டபிள்யூ கன்னங்கரா 1945ஆம் ஆண்டில் இலவசக் கல்வியைப் புகுத்த முன்னரே இக்கல்லூரியில் 1931 ஆம் ஆண்டில் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியை இலவசமாகக் கற்பதற்கு வாய்ப்பு அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழா எமது செய்நன்றி மறவாத பண்பினை விளக்குகின்றது அத்துடன் மாணவர் சமுதாயத்துக்கு சைவப் பெரியார்களின் கொடைவள்ளல்களின் செயற்கரிய செயல்களை எடுத்துக்காட்டுவதாகவும் அமையும்.

வாழ்க மழவராயர் பணிகள்!

**திரு: தி: மாணிக்கவாசகர்,**
தர்மகர்த்தா. இளைப்பாறிய
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்.


வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின்
நினைவு நாள் சிறப்புற வாழ்த்துகின்றோம்
அமீர்ரெக்ஸ் அன்ட் ரெயிலரிங்
நவநாகரிக உலகில் ஆடவர்க்கேற்ப திருமண சூட், குர்தா, சபாரி, ஜீன்ஸ், சேட், சோட்ஸ் மற்றும் இன்றைய பெண்களுக்கான அனைத்து ஆடைகளையும் குறித்த நேரத்தில் தரமான முறையில் தைத்துப் பெற்றிட வட இலங்கையில் புகழ் பெற்ற ஒரே ஸ்தாபனம்

**அமீர்ரெக்ஸ் அன்ட் ரெயிலரிங்**
73 பெரிய கடை யாழ்ப்பாணம்
தொலை பேசி இல: 23021

சகல விதமான நவநாகரிக பாதணிகள்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள

**F) பேமஸ் ஸ்ரோர்ஸ்**
55 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

அலங்கார அழகு சாதனப் பொருட்கள்
திருமணப் பெண்களை அலங்கரிக்கும் தலை நகை செட் வாடகைக்கு வழங்குபவர்கள்
★★★★
**★ முர்ஷிதா ரேடேஸ் ★**
75 பெரியகடை யாழ்ப்பாணம்

சகல விதமான புடைவைத் தினிசுகள்
கூறைச் சேலைகள், சிறுவர் சிறுமியர்களுக்கு
ஏற்ற றெடிமேட் ஆடைகளுக்கு
**வாகினி ரெக்ஸ்ரைல்ஸ்**
81 பெரிய கடை யாழ்ப்பாணம்


நவீன தையல் வேலைகளுக்கு
**★ சுப்பிறீம் ரெயிலேர்ஸ் ★**
49A கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

வள்ளல் மழவராயர் கந்தையா நாமம்
வாழ்க பல்லாண்டு!
**த. சோமசுந்தரம்**
முறிவு நெரிவு வைத்திய நிபுணர்
கே: கே: எஸ் வீதி யாழ்ப்பாணம்

சகல விதமான பிரயாண, பாடசாலை, பேக் வகைகளும் எவர்சில்வர், பென்னிபொருட்களும், மணிக்கூட்டு வகைகளும், வெளிநாட்டு கொலோன் வகைகளும், திருமண, விளையாட்டு, பிறந்த நாள் பரிசுப் பொருள்களும், லேஸ், பட்டன், நூல் வகைகளும் குறைந்த விலையில் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்:
**இனுயா றேட் சென்ரர்**
**றிவாயா றேடேஸ்**
49 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
● கிளை: இல 3 பெரியகடை யாழ்ப்பாணம்
(சகல விதமான பிரயாண பேக் வகைகளின் உற்பத்தியாளர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்)


## கல்விப் பணிக்கு வாரி வழங்கிய புத்தூர் மழவராயர் கந்தையா

இந்த நூற்றாண்டின் முற்கூற்றிலே வசதி வந்த தர்ம வள்ளல்கள் யாழ்ப்பாணத்திலே சிலர் மட்டுமே இருந்தார்கள். இவர்களுள் கல்விப் பணிக்கு வாரி வழங்கியவர்களென இராமநாதன் துரை, புத்தூர் மழவராயர் கந்தையா, கந்தரோடை மனேச்சர் கந்தையா எனும் மூவரையும் முதலிற் சிந்திக்கலாம். இவர்கள் பெருங்கல்லூரிகளைத் தாபித்து இலவசக் கல்விப் பணி செய்து மக்களின் நன் மதிப்பைப் பெற்றார்கள்.



கல்லூரி நிறுவுனர் உயர்திரு. மழவராயர் கந்தையா

மழவராயர் கந்தையாவின் தருமச் செயல்களை இப்போது ஞாபகப்படுத்துவன புத்தூர் அன்னசத்திரம், சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் சிவன் கோயில் ஆகியன. இவற்றைப் பரிபாலிக்கும் அறிவு இவருக்குப் போதியளவு இருந்தால் அதுவே போதுமென்று மேற் படிப்பிற்கு வசதியிருந்தும் அதனைத் தொடர அவர் விரும்பவில்லை. சமூகத்தொண்டையே பெரிதெனப் போற்றி அதில் ஈடுபட்டார். 1931 சித்திரையில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1932 ஆனியில் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இவ்வாண்டு முதல் இலங்கையில் இலவசக்கல்வி யாவரும் பெறக் கூடிய ஒரே பாடசாலையாக சோமஸ்கந்தா மிளிர்ந்தது எனலாம்.

எல்லாக் கோணங்களிலிருந்தும் நோக்குமிடத்து 'சீமான் மழவராயர் கந்தையா அவர்கள் 'ஈதல் நன்று' என்ற ஒரே தர்மத்தைக் கடைப்பிடித்து அது என்றென்றைக்கும் குறைவு படாது இயல வேண்டும் எனக் கருதி மூன்று அறக் கட்டளைகளை நிறைவேற்றியுள்ளார். இந்த நல்ல முடிவுப் படி அவரது கல்லூரி, சத்திரம், கோயில் யாவுமே இடையூறுமின்றி இயங்க வேண்டும்.

அ. வி. ம.

யாதொரு பிரதியுபகாரமோ புண்ணியமோ சேருமென்பதை எதிர்பாராது ஒரு சமய சமூகத்தைக் கண்முன் காண்பதை இலக்காகக் கொண்டிருந்தார். பல காலமாகத் தடைப்பட்டிருந்த விசுவநாதரின் மகா கும்பாபிஷேக வைபவமும் 03-09-1989 இல் சிறப்புற நடந்தேறியுள்ளது.

சோமாஸ்கந்தக் கல்லூரிக்கான அறக் கட்டளை 1935ஆம் ஆண்டிற்குச் சிறிது முன்னதாகத் தர்ம சாதனம் செய்யப்பட்டிருத்தல் கூடும் இதன்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னுகம் கோட்டக் கல்வி அலுவலர் வாழ்த்துரை

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியை நிறுவிய அமரர் மழவராயர் கந்தையா ஞாபக தினத்தைக் கொண்டாடுவது அறவள்ளல்களினதும், சமயப் பெரியார்களினதும் புனித சேவையைப் பெருமைப்படுத்துவதாகும்.

கார்நிகர் கொடை வள்ளல் பெருமையை நிலைநாட்டும் கல்லூரி வாழ வளர எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்

இ. க. குலசேகரன்

## நின்புகழ் வாழி!

அருங்கலம் புதுவைக் கண்ணல்
- மழவர் கந்தையா அன்னாற்கு
அருங்கலம் சோமஸ்கந்தக் கல்லூரி அதற்கு வாய்த்த
அருங்கலம் குமாரசாமி அதிபரே அவர்க்குச் சேவை
அருங்கலம் அதற்கன்னாரின் சிலமே அணியதாமே!

— பண்டிதர் ச. சுப்பிரமணியம்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி வாழ்த்துரை

புத்தூர் சோமாஸ்க்கந்தக் கல்லூரியை ஸ்தாபித்து அதன் செயற்பாட்டிற்காகப் பல சொத்துக்களை வழங்கி இலவசக் கல்விக்கு வித்திட்டவரான உயர் திரு: மழவராயர் கந்தையா அவர்களின் நினைவு தினத்தைக் கொண்டாடும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியின் வளர்ச்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியின் தர்மகர்த்தாசபைத் தலைவர் என்ற வகையில் கொடை வள்ளல் வழங்கிய சொத்துக்கள் யாவும் சிதையாமல் அவரது எண்ணப் படி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்பட தர்மகர்த்தா சபை உறுப்பினர்களும், பெற்றோரும், ஆசிரியரும், மாணவரும், பழைய மாணவரும் ஊக்கமுடன் செயற்படுவார்களாக. ★

## செய்யாமல் செய்த உதவி

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்பது வள்ளுவம். சீர்பல ஏந்திநம் அன்னையை நிகர்த்த ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி உயர்ச்சியடைய அளப்பெரும் சேவையாற்றிய அதிபர்கள் அமரர் க. வீரசிங்கம்: அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி ஆகிய இருவரும் பழைய மாணவர்களால் நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றார்கள்.

பேர் பெற்ற இவ்விரு அதிபர்களும் பணியாற்றுதற்குரிய களத்தைச் சமைத்துக் கொடுத்த கார்நிகர் கொடை வள்ளல் அமரர் மழவராயர்கந்தையாவின் புகழ் என்றும் நிலைப்பதாக!

—பழைய மாணவர் சங்கம்


நம்பிக்கை நாணயம் நிறைந்த சேவைக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்
**வலி. கிழக்கு [வ.ப.] ப.நோ. கூ. சங்கம்**
அச்சுவேலி

தனது 36 கிளைகளினூடாகவும், பின்வரும் சேவைகளை மக்களுக்கு வழங்குகிறது:
1. நுகர்ச்சிச்சேவை (சில்லறை / மொத்த விற்பனை), 2. எரிபொருள் சேவை, 3. விறகு விற்பனை சேவை, 4. கதிரை வாடகை சேவை, 5. புடைவை, புத்தக சேவை, 6. வாகன (ஏற்றி இறக்கல்) சேவை, 7. விவசாய, பசளை, கிருமிநாசினி, விதை பொருள் சேவை, 8. சமூக, கலாசார சேவை, 9. சிக்கன கடன் வழங்கல் சேவை, 10. கூட்டுறவு மகளிர் குழு பயிற்சி கூட்டுறவுக் கல்விச்சேவை, 11. மின்சார இணைப்பு உபகரண சேவை, 12. கட்டிட கனரக சேவை.

பாவனையாளர்களின் வசதி கருதி வாரந்தோறும் வெள்ளிக்கிழமை பிற்பகல் ½ நாளும், சனிக்கிழமையும் மூடப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் அனைத்துக் கிளைகளும் காரியாலயமும் சேவையிலீடுபட்டு வருகின்றன.

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,
தொண்டைமானாறு வீதி, அச்சுவேலி.


## எமது கல்லூரியை வளர்க்க விடாமுயற்சியுடன் பாடுபடுவோம்

வலிகாமம் கிழக்குப் பகுதி மாணவப் பரம்பரையினர் சைவப் பாரம்பரியத்தில் இலவசக் கல்வியைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்குத் தமது சொத்துக்களை அறக்கட்டளை வடிவில் அர்ப்பணித்த கல்வி முன்னோடி என்ற புகழைப் பெற்றவர். கார் நிகர் கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா ஆவர்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் ஸ்தாபகர் என்ற வகையில் அவரது ஜனன தினமான செப்ரெம்பர் 10ஆம் நாள் பரிசளிப்பு வைபவத்துடன் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வந்தது. இவரது சொத்துக்கள் கல்லூரியின் தர்மகர்த்தா சபையினால் பேணப்பட்டு வருகின்றன. மிக அண்மைக் காலத்தில் சொத்துக்களைப் பராமரிப்பவர்கள் ஒன்று கூடி தற்போதைய சூழ்நிலைக்கேற்ப தாமாகவே முன் வந்து வாடகைப் பணத்தை கட்டித் தருவதற்கு இசைந்துள்ளனர். மாணவர் கல்வியில் இவர்கள் கொண்ட பற்றும் கல்லூரியை வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்ற விருப்பமும் இவர்கள் மனத்தில் குடிகொண்டுள்ள இவ் விழிப்புணர்ச்சி மேலும் ஊக்கம்பெற வேண்டும்.

இவ்வளவு பெரிய சொத்துக்கள் இருந்தும் ஸ்ரீ சோமஸ்கந்த மாணவர்கள் ஓலைக்கொட்டில்களில் தான் தமது ஆரம்பக் கல்வியைப் பெறுகின்றனர். இவர்கள் சீரான நீர்வசதியையோ அல்லது மலசலகூட வசதியையோ பெறவில்லை. பெற்றோர் நலன்விரும்பிகள் பழைய மாணவர் அமரர் திரு மழவராயர் கந்தையா அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வதற்கு வெறும் பார்வையாளராக இல்லாது பங்காளிகளாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது மாணவர்கள் தாபகரின் நன்கொடையிலிருந்து பூரண பயனைப் பெறுவதற்கு நாமெல்லோரும் விடாமுயற்சியுடன் பாடுபடவேண்டும்.

வாழ்க அறவள்ளலின் புகழ்!
வளர்க ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி!!

**நா. கணேசபிள்ளை,**
கொத்தணி அதிபர், புத்தூர்.


வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களின்
நினைவு நாள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
திருமணம் மற்றும் முகூர்த்த
பட்டுப் புடவைகளின் சோலை
★
**இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்**
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

★ வாழ்க சோமஸ்கந்த கல்லூரி ★
சகல விதமான புடைவைத்தினிசுகளையும்
கூறைச்சேலைகளையும் எண்ணம் போல் தெரிவு செய்ய
**★ விக்னேஸ் ரெக்ஸ் ★**
65, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

வாழ்க சோமஸ்கந்த கல்லூரி
சகல விதமான புடைவைத் தினிசுகளுக்கும்
V
**குமார் ரெக்ஸ்ரைல்ஸ்**
55 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சோமஸ் கந்தகல்லூரி நிறுவியவர்
நினைவு நாள் சிறப்புற
● வாழ்த்துகின்றோம் ●
●
**★ யுனைதீன் ★**
61 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவநாகரிக பாதணிகளின் விற்பனையாளர்கள்
**கண்ணன் பூட்வெயர்**
**கண்ணன் ஸ்ரோர்ஸ்**
**கண்ணன் பாதணி நிலையம்**
59 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

வாழ்க சோமஸ்கந்தா! வளர்க, வள்ளலார் பணி!
சகல சிற்றுண்டி வகைகளுக்கும்
சிறந்த குளிர்பானங்களுக்கும்
க. இராமநாதன்
**★ கோலா கூலா ★**
45 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

நிறுவுனர் நினைவு நாள் சிறப்புற
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்
**மலாயன் சலூன்**
63 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

சகல விதமான சப்பாத்து வகைகளும்
செருப்பு வகைகளும், சூட்கேஸ்களும்
குறைந்த விலையில் தைத்துக் கொடுக்கப்படும்
★
**பஸ்மீனு ரேட் சென்ரர்**
47 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகடனப்படுத்தாத அமெ.-சோவியத் யுத்தம்

# ஆப்கனில் இடம்பெறும் ஆபத்து!

## மாஸ்கோ எச்சரிக்கை

காபூல், செப். 9

ஆப்கன் கெரில்லாக்களுக்கு தொடர்ந்து அமெரிக்கா ஆயுத உதவி அளிப்பது பிரகடனப்படுத்தாத யுத்தம் ஒன்றில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சடுபட வழிவகுக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

காபூலில் சோவியத் தூதராகப் பணிபுரியும் பிரதி வெளியுறவு அமைச்சர் யூலி வொரன்ஷோங் முன்கண்ட எச்சரிக்கையை நேற்று விடுத்தார். பி. பி. சி. யின் காபூல் செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை- பெல்கிறேடில் நடந்த அணிசேரா இயக்க மாநாட்டில் ஆப்கன் தலைவர் டாக்டர் நஜிபுல்லா பேசுகையில் ''அமெரிக்காவின் இரண்டாவது வியட்னாமாக ஆப்கன் இருக்கப் போகிறது'' என்று தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பாகிஸ்தானும் ஒதுக்கப்பட்டுவிடும் என்றும் டாக்டர் நஜிப் சொன்னார்.

பாகிஸ்தான் அரசின் சார்பில் ஜனுபா நுரைத் பூட்டோ பேசுகையில், அணிசேரா இயக்கத்தில் ஆப்கன் கெரில்லா அரசுக்கும் உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (எ)

---

## சீட்டிழுப்பு முடிவுகள்

மட்டுவில் தெற்கு வேம்படி கந்தசுவாமி கோவிலில் 01 - 09 - 1989 இல் நடைபெற்ற அதிஷ்ட இலாபச் சீட்டு முடிவு விபரம்.

1 ஆம் பரிசு இல. 622    2 ஆம் பரிசு இல. 923

3 ஆம் பரிசு இல. 601

மேற்படி அதிஷ்ட இழுப்பு பண்டிதர் S. சிவலிங்கம் ஓய்வுபெற்ற அதிபர் தலைமையில் கோவில் முன்றலில் நடைபெற்றது.

(2303)    கோவில் சபையினர்.

---

## வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம் கோரல்

எமது சங்கத்தால் பலரகமான 6000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ரூ. 5/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வைப்புப் பணமாக ரூ 500/- செலுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்'' எனக் குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். சாக்குகளை கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 19. 09. 1989

— பொது முகாமையாளர்,
புலோலி பல நோ கூ. சங்கம்.

(சி/3332)

---

# போக்குவரத்து ஊழியருக்கு சம்பள உயர்வாக பஸ்!

## ராஜஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பு

ஜெய்ப்பூர், செப்டெம்பர் 9

முகமது அனீஸ்கான், ராஜஸ்தான் மாநில அரசு போக்குவரத்துச் சபையில் எழுது வினைஞராகப் பதவி வகித்து வந்தார்.

இவருக்குக் கடந்த 13 ஆண்டுகளாக சம்பள உயர்வோ மற்றும் சலுகைகளோ சபையால் வழங்கப்படவில்லை.

மேலதிகாரிகள் தன்னை விரும்பாத காரணத்தால் இவை கிடைக்கவில்லை என்று கூறி இவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

விசாரணை முடிவில் சம்பள உயர்வு, மற்றும் சலுகைகளை வழங்கும்படி நீதிமன்றம் சபையைப் பணித்தது.

நீதிமன்ற உத்தரவையும் சபை புறக்கணித்தது. மீண்டும் அந்த ஊழியர் நீதிமன்றத்தின் உதவியை நாடினார்.

கடந்த வாரம் ஊழியரின் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தின் உத்தரவின் மீது சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

சபை வழங்கவேண்டிய 45 ஆயிரம் ரூபா பணத்திற்காக, அந்த பஸ்ஸை நீதிமன்றம் அந்த ஊழியரிடம் ஒப்படைத்தது.

அனீஸ்கான் அந்த பஸ்ஸைத் தனக்கு வரவேண்டிய சம்பள உயர்வுக்காகப் பெற்றுக்கொண்டு, அதை ஓட்டியபடி வீடு சென்றார். (எ)

# ஈராக் வெடிவிபத்தில் எழுநூறு பேர் மரணம்!

லண்டன், செப். 9

ஈராக் இராணுவ ஆயுத உற்பத்திக் கிடங்கில் அண்மையில் ஏற்பட்ட வெடி விபத்து ஒன்றில் குறைந்தது எழுநூறு பேர் கொல்லப்பட்டனர் என்று லண்டன் பத்திரிகை 'இன்டிபென்டென்ற்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அல்ஹியால் நகர் அருகில் ஏற்பட்ட இவ்விபத்தால் உருவான தீயை அணைக்க ஒரு வாரம் வரை சென்றது என்றும் தீயணைப்பு நடவடிக்கையில் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## எகிப்து முயற்சி

கெய்ரோ, செப். 9

செனகலுக்கும் மொரிட்டானியாவுக்கும் இடையேயான தகராறுகளைத் தீர்க்கும் முயற்சிகளில் எகிப்து ஈடுபட்டிருக்கிறது.

எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் முதற்கட்டமாக நேற்று செனகல் சென்றார். [எ]

## பாக்கியராஜ் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில்

சென்னை, செப் 9

நடிகர் கே. பாக்யராஜின் எம் ஜி ஆர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு, பொதுக்குழு ஆகியவற்றின் கூட்டங்கள் வருகிற 15ஆம் திகதி ஈரோடில் நடைபெறும்.

ஜெயலலிதா தலைமையில் உள்ள அ தி மு க அங்கம் வகிக்கும் அணியை எதிர்த்து பாக்யராஜ்கட்சி, அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் ராஜா முகமது அமைப்புச் செயலாளர் டாக்டர் கே பி இராமலிங்கம் ஆகியோர் தெரிவித்தனர். (எ)

## ஒன்பது ஆண்டு சிறைத் தண்டனை

மாஸ்கோ, செப். 9

ஊழல் புரிந்ததாக உஸ்பெக்கிஸ்தான் மாநிலத்தின் முன்னாள் பிரதமர் மாரிகோவை 9 ஆண்டுகள் தொழில் முகாமில் கட்டாய வேலை செய்யும்படி சோவியத் அரசு உத்தரவிட்டது.

லஞ்சம் கொடுத்தது, லஞ்சம் வாங்கியது, 80 ஆயிரம் டாலர் பணத்தை தவறான முறையில் சேமித்தது ஆகிய குற்றச் செயல்களுக்காகவே இத்தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. (எ)

---

## கல்விப்----

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும்படிகளைக் கொண்டு கல்லூரிச் செலவுகளைச் செய்வதுடன் கல்லூரியிலமைந்த மூர்த்திகளுக்கு தினமும் இருகாலப் பூசை நடத்தவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், வருடம் தோறும் வங்கியில் கல்லூரிக் கணக்கில் ஓரளவு பணம் போடுதல் வேண்டும்.

இப் பணத் தொகையில் ஒரு 'நிதியம்' அமைத்து இதன் வட்டிப்பணத்தை யாழ்வளாக இந்து நாகரிக பீடத்தின் கீழ் மழவராயர் ஞாபக உதவிக் கொடை என ஒரு தொகையை வருடாவருடம் ஓர் ஆராய்ச்சி மாணவனுக்கு வழங்குவது இப் பெரியாரின் ஞாபகார்த்தமாகச் செய்யும் ஊக்குவிப்பாகும் [illegible]
வாழ்க சைவம்!
வாழ்க [illegible]

---

## முதலாவது எதிரி

தாய்லாந்து நாட்டின் சுகாதாரத்துக்கு முதலாம் நம்பர் எதிரியாக எய்ட்ஸ் நோய் இருக்கிறது.

இப்படி பாங்கொக் அரசு அறிவித்திருக்கிறது.

எய்ட்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்தினரின் உதவியை தாய்லாந்துப்பிரதமர்சாட்டிச் சாய் சூன்ஹவன் நாடியிருக்கிறார்.

இராணுவத் தலைவர் சவாலிற் யக்காராவும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க சம்மதம் தெரிவித்தார். (எ)

## தேர்தல் முடிவுகள்

தென் ஆபிரிக்க நாடாளுமன்றத் தேர்தலில், ஆளும் தேசியக் கட்சி குறைந்த பெரும்பான்மையுடன் மீண்டும் வெற்றி பெற்றது.

ஆனால் தென் ஆபிரிக்க அரசியலில் புதிய நிலைப்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது.

ஆளும் தேசியக் கட்சிக்குப் பூரண பெரும்பான்மை கிடைக்காத காரணத்தால் வேறு கட்சிகளுடன் சேர்ந்து கூட்டு அரசு ஒன்றை அமைக்கும் நிலை அதற்கு ஏற்பட்டுள்ளது.

எதிர்க் கட்சிகளான கன்சர்வேட்டிவ் கட்சியும் இடதுசாரிகள் தொடர்புள்ள ஜனநாயகக் கட்சியும் கூடுதல் தொகுதிகளைக் கைப்பற்றின. ஜனநாயகக் கட்சி தற்போதைய அரசின் நிறவேற்றுமைக் கொள்கையை எதிர்த்து வருகின்றது.

பதில் ஜனாதிபதியாகத் தெரிவான திரு எச். டபிள்யூ. டி. கிளேர்க் பிரதிநிதித்துவப்படுத்திய தொகுதியை மீண்டும் ஆளும் தேசியக் கட்சி கைப்பற்றியது. ஆனால் பெரும்பான்மை வாக்குகளோ ஆக ஐந்து என்று அறிவிக்கப்பட்டது.

வாக்குகள் எண்ணப்பட்டதில் ஊழல் இடம்பெற்றதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வெற்றியீட்டிய ஆளும் கட்சி வேட்பாளர்களும் மிகக் குறைந்த பெரும்பான்மை வாக்குகளைத்தான் பெற்றிருந்தனர். (எ)

---

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



அமரர்
திருமதி சீனிவாசகம் (கதிரவேலு) நாகம்மா

மலர்வு: 08 - 11 - 1923    உதிர்வு: 25 - 08 - 1989

நாளை 11 - 09 - 1989 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்காத பிரிவென்னும்
தணல் நெருப்பில் வாடும்:

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

கணவர் - பிள்ளைகள்.
சகோதரங்கள்.

(2140)

---

# கேள்வி அறிவித்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் விவசாய வீதிகள், சிறிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைத்தல்

## கமத்தொழில் சேவைகள் திணைக்களம் கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்ட கமநலச் சேவைகள் உதவி ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் 1989-09-27ஆம் திகதி காலை 11.00 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அவை அதே திகதியில் காலை 11.30 மணிக்கு திறக்கப்படும்.

| வேலையின் பெயர் | மீளப்பெறக் கூடிய வைப்புப் பணம் | தேவைப்படும் பதிவுத்தொகை |
|---|---|---|
| 1. காட்டுக்குளம் திருத்துதல் | 250/- | 100,000/- |
| 2. பனிக்குடாக் குளம் திருத்துதல் | .. | .. |
| 3. செம்பன் குண்டுக் குளம் திருத்துதல் | .. | .. |
| 4. கரைவிளான் குளம் திருத்துதல் | .. | .. |
| 5. கிராஞ்சிக் குளம் திருத்துதல் | .. | .. |
| 6. ஆராத்திக் குளம் திருத்துதல் | .. | .. |
| 7. சிவசுந்தரம் வட்டக்கச்சி பண்ணை வீதி கோழிப்பண்ணை விவசாய வீதி அமைத்தல் | .. | .. |
| 8. ஆறுமுகம் வீதியில் இருக்கும் 14ச விவசாய வீதி அமைத்தல் | .. | .. |
| 9. குஞ்சுக்குளம் விவசாய வீதி அமைத்தல் | .. | .. |
| 10. முட்கொம்பன்-நேரடம்பன் விவசாய வீதிதிருத்தல் | .. | .. |
| 11. முனியப்பர் கோவில் விவசாய வீதி திருத்துதல் | .. | .. |
| 12. பெரிய தம்பிராய் குளம் திருத்துதல் | .. | .. |

02. கேள்விப் படிவங்களை மீளப் பெறக் கூடியதும் (ரூபா 250/-) மீளப்பெற முடியாததுமான (ரூபா 25/-) தொகைகளை இக் காரியாலயத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுக்களுடன் பதிவுக்குரிய ஆவணங்களையும் கொண்டு வருபவர்களுக்கு 1989-09-26ஆம் திகதி பி. ப. 2.00 மணிவரை குறித்த கேள்விப் பத்திரங்கள் இவ் அலுவலகத்தில் வழங்கப்படும்.

03. இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட ரூபா 250/- கட்டுப்பணம் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு பொருந்தாது (கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிரு முன்னேற்றச் சங்கங்கள்) ஆகியன.

04. மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். சி. தனிநாயகம்
உதவி ஆணையாளர்,
கமநலச் சேவைகள் திணைக்களம்,
கிளிநொச்சி மாவட்டம்.

கமநலச் சேவைகள் திணைக்களம்,
பூநகரி வீதி, பரந்தன்.
1989-08-31.

[இ-3012]

---

# உலகளாவிய தொடர்புகள்

## டுவின்ஸ் கொமியூனிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் வழங்கும் 24 மணி நேரச் சேவைகள்

பிரான்ஸ் கனடாவில் உள்ள உங்கள் உறவினர்களுக்கோ, தொழில் சார்ந்த சகாக்களுக்கோ எமது பிரான்ஸ் - கனடா முகவர் ஊடாக ஃபாக்ஸ் (Fax) மூலம் துரிதமாக தகவல்களைப் பரிமாற எம்மை நாடுங்கள்:

கீழ்க் காணும் எமது முகவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**வவுனியா**
மு. காசிப்பிள்ளை
சக புத்திரர்கள்

**யாழ்ப்பாணம்**
ஸ்டுடியோ டில்கா
202 A, ஆஸ்பத்திரி வீதி

**மட்டக்களப்பு**
தயா எலக்டிரிக்கல்ஸ்
111. திருகோணமலை வீதி

**திருகோணமலை**
ஃபியூஜிகா என்டர்பிறைசஸ்
32, ராஜவரோதயம் வீதி

**எமது சேவைகள்:**

- ★ வெளிநாட்டு (IDD) / உள்ளூர் நேரடித் தொலைபேசித் தொடர்புகள்
- ★ ஃபாக்ஸ் (FAX) வசதிகள்
- ★ டெலக்ஸ் (TELEX) வெளிநாட்டுத் தந்தி
- ★ போட்டோ பிரதிகள் (பெருப்பித்த / குறைத்தல் உட்பட)
- ★ ஆங்கில தட்டெழுத்து வசதிகள்

மேல் விபரங்களுக்கு:-

## டுவின்ஸ் கொமியூனிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

161, 1/1, காலி வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு - 4

தொலைபேசி: 501838 501839 501840
டெலக்ஸ்: 22777, 22778, TWINS CE
ஃபாக்ஸ்: 94 - 01 - 501841

*Twins Communications (Pvt) Limited*

[சி-3652]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் கட்டுபவரும்,
கண்ணாடி தருபவரும்!



கீளை:
P. I. பர்னாண்டோ
893, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்;



# உதயன்

10 · 09 · 1989 ஞாயிற்றுக்கிழமை



கண்ணாடி கொடுப்பவரும்,
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்;


## புலோலியில் வெள்ளி இரவு ஷெல்வீச்சும் வேட்டுக்களும்!

பருத்தித்துறை, செப். 10
புலோலியில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இரவு "பரா" வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு, ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது: சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

அன்று மாலை 6 30 மணியளவில் முகாமை நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டதன் பின்னர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

தாக்குதல் காரணமாகப் புலோலிப் பகுதி மக்கள் பதற்றத்துடனும் பீதியுடனும் இரவுப் பொழுதைக் கழித்தனர்:

நேற்றுக் காலை 6 30 மணிக்குப் பின்னரே பஸ் மற்றும் வாகனங்கள் ஓடத் தொடங்கின. (ஓ-118)

### யாழ் பல்கலைக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வப்பட்டுள்ளன.

இதுபோன்ற இணைப்புச் சேவை ஒன்றை யாழ் பல்கலைக்கழகத்துக்கும் ஏற்படுத்தவே பேச்சுக்கள் நடந்தன: (ஓ-3)


## விற்பனைக்கு

மின்சாரம் இல்லாத நேரத்திலும் குழாய்க் கிணற்றிலிருந்து அல்லது சாதாரண கிணற்றிலிருந்தும் உங்கள் வீட்டுக்குத் தேவையான தண்ணீர்ப் பிரச்சினையை இலகுவில் தீர்த்து வைக்கிறது 'ஹைற்ரோ' (HYDRO) பைப்பம்புகள்.

குறிப்பு:- வீட்டில் மின் மோட்டர்கள் பொருத்தி வைத்திருப்பவர்கள் அதே பைப்பில் இதையும் பொருத்தி அதிக இலாபம் அடையுங்கள். மேலதிக விபரங்களுக்கு!

VASANTHY ELECTRICALS
110 K K S. Road,
Chunnakam [C/3644]


## மரண அறிவித்தல்கள்

### திரு. கனகசிங்கம் பரமேஸ்வரன் (பொன்னுக்கோன்)

கரவெட்டி வடக்கு வதிரியைச் சேர்ந்த திரு. கனகசிங்கம் பரமேஸ்வரன் அவர்கள் 07-09-1989 அன்று அமரரானார்.

அன்னார் செல்லையா பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகரும், வதிரி மடத்துப் பிள்ளையார் உல்லியனொல்லை அம்பாள் ஆலயங்களின் தர்மகர்த்தாவுமான காலஞ்சென்ற நாகலிங்கம் கனகசிங்கத்தினதும் பரபதத்தினதும் அன்பு மகனும், மரகதத்தின் அன்புக் கணவரும், பூங்கோதை, கீதாஞ்சலி, நளாயினி, மயூரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரராஜசிங்கம், பொன்னுத்துரை (முன்னாள் தொழில் ஆணையாளர்), மகேந்திரன் (முன்னாள் இலங்கை வங்கி பிரதம லிகிதர்), ஆறுமுகம் (ஜேர்மனி), திருமதி கயிலயநாதன் (கனடா), காலஞ்சென்ற தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரம், பாக்கியம் (நாவற்குழி) ஆகியோரின் அன்பு மருமகனும், இரத்தினபூபதி, காலஞ்சென்ற கயிலாயநாதன் (O A., தொழிற் சந்தோர், கொழும்பு), சுப்பிரமணியம், நடராசா, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-09-1989 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 10 00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாக வேண்டுகின்றோம்.

தகவல்;
மனைவி - மக்கள்

தட்டாந்தோட்டம்,
பாடசாலை ஒழுங்கை,
வதிரி, கரவெட்டி. (2098)

### திரு. சின்னத்தம்பி மாணிக்கம்

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமான பிரபல பழக்கடை வர்த்தகருமாகிய திரு. சின்னத்தம்பி மாணிக்கம் 09-09-1989 இல் காலமானார்.

இவர் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், (காலஞ்சென்ற மயில்வாகனம், மனோன்மணி) லட்சுமிப்பிள்ளை, அன்னம் ஆகியோரின் சகோதரரும், திருஞானசம்பந்தர், பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், மதுராம்பிகை, மனோறஞ்சிதம், மணிமேகலை, மஞ்சுளாதேவி ஆகியோரின் தகப்பனாரும், குணசிங்கம் (A. G. எலக்றிக்கல்) அவர்களது மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 10-09-1989 இன்று மாலை 4-00 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
ப. கார்த்திகேசு
(மருமகன்)

கொக்குவில்;
(1938)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 508/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## எண்ணெய் ஆலையில் தீ!

சப்புமல்கஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் (வெள்ளி) பிற்பகல் 2 30 மணியளவில் இரண்டாம் இலக்க குதத்தில் திடீரென தீப்பிடித்துக் கொண்டது:

பதினைந்து நிமிடங்களில் தீ அணைக்கப்பட்டது: (ஓ-ஈ)

## மின் கம்பத்தில் சடலம்

மிருசுவில் சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை மின் கம்பம் ஒன்றில் சூட்டுக் காயங்களுடன் ஒருவரின் சடலம் கட்டப்பட்டிருந்தது.

கொல்லப்பட்டவர் உசன் பனங்காட்டைச் சேர்ந்த ஆழ்வான் குணம் (வயது 30) என அடையாளம் காணப்பட்டார். (ஓ-117)

## ஜெனரேட்டர்கள்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யும் சுவிட்ஸர்லாந்தில் உள்ள மேற்படி ஜெனரேட்டர்களைத் தயாரித்த கம்பனிக்கு 'ரெலக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்ப உள்ளோம்,

அங்கிருந்து தொழில்நுட்ப உதவிகள் கிடைத்த ஒரு வாரத்தினுள் திருத்த வேலைகளை மிடிக்கலாம் என நம்புகிறோம் அந்த வேலைகள் முடிந்த கையோடு இந்த ஜெனரேட்டர்களின் மூலம் வடபகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும்.

முதல் ஒரு ஜெனரேட்டரும் சில நாள் திருத்த வேலைகளின் பின் அடுத்த ஜெனரேட்டரும் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீமெந்து தொழிற்சாலையில் இதுவரை இந்த ஜெனரேட்டர்களை பராமரித்து வந்த தொழிலாளர்களையே இந்த வேலைக்கு தொடர்ந்து அமர்த்த திட்டமிட்டுள்ளோம்,

இந்த இரண்டு ஜெனரேட்டர்களும் இயங்கத் தொடங்கினாலும் யாழ் மாவட்டத்திற்கான மின்தேவையை முற்றுகப் பூர்த்திசெய்ய முடியாது;

யாழ். மாவட்டத்திற்கு நாளொன்றுக்கு பகலில் 25மெகாவாட்ஸும் இரவில் 40 மெகாவாட்ஸ் மின்சாரமும் தேவை.

ஆனால் பிரஸ்தாப ஜெனரேட்டர்களில் ஒவ்வொன்றில் இருந்தும் சராசரியாக 8மெகாவாட்ஸ் மின்சக்தி பெறமுடியும் இரண்டு ஜெனரேட்டர்களிலிருந்தும் மொத்தம் 16 மெகாவாட்ஸும், சுன்னாகத்தில் உள்ள ஜெனரேட்டர்களிலிருந்து 4 மெகாவாட்ஸுமாக மொத்தம் 20 மெகாவாட்ஸ் மின்சக்தியே நாளொன்றிற்குப் பெறமுடியும்;

இவற்றில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு மின்சக்தி வழங்கப்படாத பட்சத்தில் யாழ்-மாவட்டத்திற்கு பகலுக்கு 15மெகாவாட்ஸும், இரவில் 25 மெகாவாட்ஸும் மின்சாரம் வழங்க முடியும்:

ஆனால் சிமெந்து தொழிற்சாலைக்கு மின்சக்தி வழங்குவதா, இல்லையா என்பது பற்றி இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை;

அப்படி வழங்கப்படாத பட்சத்தில் யாழ்-மாவட்டத்திற்கு பகலில் முழு நேரமும், இரவில் சுழற்சி முறையிலும் மின்சாரத்தை வழங்கலாம்;

சிமெந்துத் தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்கப்படும் பட்சத்தில், யாழ்-மாவட்டத்தில் தற்போது அமுலில் உள்ள ஒருமணி நேர சுழற்சி முறை மின்விநியோகத்தை இரு மணி நேரத்துக்கு மட்டும் விரிவுபடுத்த முடியும்:

இவ்வாறு அவர் கூறினார். (உ-ஓ-9)

### குமுழமுனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிழமை அதிகாலை முதல் வற்றாப்பளை, கேப்பாபிலவு, முள்ளியவளை ஆகிய பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. (ஓ-92)

### வடபகுதிக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற கூட்டத்தில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி, மன்னார், வவுனியா போன்ற இடங்களுக்கும் உடனடியாக எரிபொருள் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம்,

சுன்னாகம் மின் நிலையத்துக்குத் தேவையான ஹெவி டீசலும் கூடுதலான அளவு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன — என்றார்: (ஓ-3)

### பருத்தித்துறை:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
(வயது 60) என்பவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்; இவர் இப்பாதிய ஆஸ்பத்திரி பிரதம லிகிதர் ஆவார்:

புலோலி தெற்கில் ஒரு வீடு ஷெல் வீழ்ந்து பலத்த சேதமுற்றது;

இச்சம்பவங்களைத் தொடர்ந்து பருத்தித்துறையில் மீண்டும் பதற்றநிலை நிலவுகிறது.

இதனிடையில் பருத்தித்துறையில் அன்று (வெள்ளிக்கிழமை) நிலவிய பதற்றம் காரணமாக இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்பட இருந்த மீளக்குடியமர்தல் நிவாரண..... மும் கொடுபடவில்லை என்று தெரிய வந்தது; (ஓ-118-70)

## வடபகுதி ஆஸ்பத்திரிகளில் மருந்து தட்டுப்பாடு வரும்?

யாழ்ப்பாணம், செப்; 10
வடபகுதி ஆஸ்பத்திரிகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது;

மருந்துகளை கொண்டுவர கடந்த திங்கட் கிழமை கொழும்புக்குச் சென்ற யாழ்-சுகாதார திணைக்கள லொறி நேற்று வரை இங்கு வந்து சேரவில்லை;

அரச மருந்துக் களஞ்சியத்தில் இருந்து மருந்துகள் விநியோகிக்கப்படாததே இதற்குக் காரணம் என்று அங்கிருந்து தகவல் கிடைத்துள்ளது;

கொழும்பு ஆஸ்பத்திரிகளில் வேலை நிறுத்தம் இடம்பெற்று வருவதால் மருந்துக் களஞ்சிய ஊழியர்களும் வேலைக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது; [ஓ-10]

## குப்பிளான்பகுதி: 213 பேருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 10
சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை குப்பிளான் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 213 விண்ணப்பதாரர்களுக்கான மீளக்குடியமர்தல் நிவாரணம் ஆயிரம் ரூபா வழங்கப்பட இருக்கிறது;

சம்பந்தப்பட்டோர் கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு தொடர் இலக்கத்தைப் பெற்று வங்கிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்; (ஓ-8)

### இராணுவ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காரிகள் கலந்துகொண்டனர்;

"இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்;

அதற்கு முதலில் யுத்த நிறுத்தம் ஏற்படவேண்டும்: அதன் பின்னர் சுமுகமான நிலையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வுகாண முயற்சிக்கலாம்;

-இவ்வாறு பிரமுகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்;

இந்தச் சந்திப்பின்போது பிரஜைகள் குழு பிரமுகர்கள் சில முக்கிய விடயங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை அமைதிப் படை அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது; (உ-160)

### நாவலர்

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
முயற்சி நடந்தபோது அயலவர்கள் ஒன்று கூடி கொள்ளையரைப் பிடிக்க முயற்சித்ததாகவும்—

அவ்வேளை கொள்ளையர்கள் தப்பி ஓடியதாகவும் தெரிய வருகிறது. (உ)

## லக்ஸபான நீர் மின்.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாலை அணிவித்து வரவேற்றார்.

அதன் பின்னர் அமைச்சர் அங்கு ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்;

மின்சார சபையின் வட பிரதேசப் பொறியியலாளர் திரு: வல்லிபுரம், மத்திய மின்சார நிலைய பொறுப்பதிகாரி திரு. சிவநேசன், கட்டமைப்பு பொது முகாமையாளர் திரு: தனபாலன், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன பொது முகாமையாளர் திரு: எஸ். ஞானபண்டிதர், கணக்காளர் திரு. வேல்முருகு. லங்கா சிமெந்து நிறுவன உற்பத்தி முகாமையாளர் திரு; அசோகராசா, உதவிப் பொது முகாமையாளர் திரு: அந்தோனிப்பிள்ளை, பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்; முகாமையாளர் திரு: சிவஞானம் உட்பட பல அதிகாரிகள் பிரஸ்தாப கூட்டத்தில் கலந்து கொண்டனர்:

ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு; வே; பாலகுமாரன், யாழ்; மாவட்ட எம்; பி. திரு. எட்வேர்ட் ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

ஆலோசனைக் கூட்டத்தில் வைத்து அமைச்சர் தெரிவித்த விவரங்கள் வருமாறு!-

★ வடபகுதிக்கான மின்சார விநியோகம் வழங்குவதில் ஜனாதிபதி கூடுதல் அக்கறை காட்டி வருகிறார்; ..... யாற்றில் நீர் மின்சாரம் ..... உருவாகியுள்ளது;

★ நீர் மின்சாரம் தடைப்படும் காலத்தில் தற்காலிக ஏற்பாடாக மின் வழங்கவே இன்று இந்த மின் நிலையத்தை நாம் பொறுப்பேற்கிறோம்;

★ தற்காலிக ஏற்பாடாக மின்நிலையம் ஒன்று வடபகுதிக்கு இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி விடுத்த பணிப்பின் பேரில் இம் மின்நிலையத்தை மின்சாரசபை பொறுப்பேற்று செயல்படுத்தவிருக்கிறது:

★ இந்த மின்நிலையத்தில் காஸ்ரேயைன் ஜெனரேட்டரை உடனடியாகத் திருத்த முற்பட்டுள்ளேன்: அதற்கான உபகரணத்தை சுவிஸ் நாட்டிலிருந்து கொண்டு வரவும், அங்கிருந்து நிபுணரை அழைத்து வரவும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்: அதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் அமைச்சு மேற்கொள்ளும்.

★ அத்துடன் நிர்மாண நிலையில் உள்ள மற்ற காஸ்ரேயைன் ஜெனரேட்டரையும் இயக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளேன்;

★ கொழும்புத் துறைமுகத்திலுள்ள ஸ்ரீம்டேர்பைன் ஜெனரேட்டரை எதிர்வரும் திங்கட்கிழமை துறைமுகத்தில் இருந்து இங்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன்;

★ உடனடியாக இவ்விடயங்களை மேற்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி எனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிப்புரை வழங்குகிறேன் [அ-8]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா மார்க்கண்டு

திருமதி கனகம்மா மார்க்கண்டு (ரோசம்மா) 01-09-1989 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமசேகரம்பிள்ளை மார்க்கண்டு (ஓய்வுபெற்ற சிறுப்பர், மத்திய வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், சண்முகராசா (இலங்கை வங்கி, கொழும்பு), டாக்டர் தேவராசா (லண்டன்), தம்பிராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை, அப்புத்துரை, செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரியும், லீலாவதி, மாலா ஆகியோரின் மாமியாரும், டாக்டர் ஜெயபாலன், திருமதி, வளர்மதி, ஜெயமதி, யோகமதி, டினேஸ், சுரேஸ் ஆகியோரின் பேத்தியாரும், ப்ரீத்தியின் பூட்டியுமாவார்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03 09-1989 அன்று இல. 20. பின்டோ பிளேஸ், வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை மயானத்தில் இந்து சமய முறைப்படி தகனம் செய்யப்பட்டது: இத்தகவலை உற்றார், உறவினர்; நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பிற்குறிப்பு: தவிர்க்க முடியாத காரணங்களினால் முன்கூட்டியே அறிவித்தல் தர முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்;

தகவல்:
இல. 20, பின்டோ பிளேஸ், மா. சண்முகராசா
வெள்ளவத்தை; [2127]

### திருமதி நடராசா இராசம்மா

நடராசா இராசம்மா சிவபதம் அடைந்து விட்டார்; இவர் கொக்குவில் மேற்கு, தம்புவின் மகளும், முன்னாள் பொன்னம்பலம் அன் சன்ஸ் பங்காளரும் பிரபல வர்த்தகருமாகிய செல்லையா நடராசாவின் அன்பு மனைவியும், சந்திரசேகரம் (சவூதி), சந்திரராசா (குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், தலவாக்கொல்லை), சந்திரமோகன் (மேற்கு ஜேர்மனி), இராசகுலசிங்கம் (சவூதி), குமாரகுலசிங்கம் (மேற்கு ஜேர்மனி). சந்திராதேவி சுந்தரலிங்கம் (அவுஸ்திரேலியா). ஸ்ரீரஜனி, சிவஜெயா, சந்திரகிறி ஆகியோரின் அன்புத் தாயாரும் பி. அருளானந்தம் (மிருக வைத்தியசாலை பொத்துவில்), சற்குணநாயகி, கலோசனாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், சர்மிளா, சவுதினி, தினேஷ், சிவஅனுஜா, நிஷாந்தன், சஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்; அன்னாரது ஈமைக்கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று [10-09 89 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்;

C, G, T. M, S. Lane, தகவல்,
கொக்குவில் மேற்கு, செ. நடராசா
கொக்குவில்; [2308]

### திருமதி கனகசுந்தரி நடராசா [அக்கச்சி]

(இளைப்பாறிய ஆசிரியை யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை)

திருமதி கனகசுந்தரி நடராசா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பண்டிதர் செ, நடராசா (முன்னாள் ஆசிரியர் யா/ வண்ணைவைத்தீஸ்வரா வித்தியாசாலை) அவர்களின் அன்பு மனைவியும், குமரேசன் (உரிமையாளர், குமரேசன் அரிசி ஆலை கொக்குவில்), திருமதி குமரவல்லி பத்மநாதன் ஆசிரியை யா/ சரம்பொன் கிறிய புஸ்பமகளிர் வித்தியாசாலை), குமாரவேல் (விரிவுரையாளர் லெசத்தோ), குமாரதாஸ் (தொழில்நுட்பவியலாளர் HOLLAND) ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலாதேவி, திரு. நா பதமநாதன் (பிறைகுடி) ஆசிரியர்(UNESCOபிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், லலிதாகினி, நிஷாந்தினி, சிந்துஜா, பதமஜா, பத்மரூபன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்; ஈமக்கிரியைகள் 10 - 9 - 89 இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று கோம்பையன் மணல்மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்; இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
குடும்பத்தினர்

குமரவாசம்,
கொக்குவில் மேற்கு; (2309)

### திரு சிவஞானம் சிவகுமாரன்

நல்லூரைச் சேர்ந்த சி. சிவகுமாரன் 03- 09 1989 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் திருமதி கமலாம்பிகையின் அன்புக்கணவரும், சிவஜனனியின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற திரு சிவஞானம் திருமதி சிவஞானத்தின் அன்புமகனும் சிவராஜன் (நியூசிலாந்து) Dr; சிவபாலன் (U; K), சிவகாந்தன் (U; K), திருமதி சிவதரனி சகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்; அன்னாரின் ஈமக்கிரியைகள் 7 - 9 - 89 அன்று கொழும்பில் நடைபெற்றது; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்,
சண்முகப்பிரியா,
(ஏரோ கெமிக்கல்ஸ்)

இருவப்பனை,
கொழும்பு; (8087)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org